# இந்துசமய விழாக்களும் விரதங்களும்



# இந்துசமய, விழாக்களும் விரதங்களும்

பிரம்மஸ்ரீ சோ. குஹானந்த சர்மா

•

அறநெறிப் பாடசாலைகளுக்கான

இலவச வெளியீடு - 3

68×3 =

★ University of Jaffna Library
20 DEC 2021
LIBRARY

வெளியீடு;

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
9 வது மாடி, ''காப்புறுதி இல்லம்''
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

705035

பதிப்பு: செப்டம்பர் 1992.

இலவச வெளியீடு:

வெளியீடு:

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
9 வது மாடி,
''காப்புறுதி இல்லம்''
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

# முகவுரை

இந்து சமயத்தைக் கற்கும் மாணவர்கள் தமது சமய அறிவை விருத்தி செய்து கொள்ளவும் நற்குணங்களையும், நற்பண்புகளையும், வளர்த்துக் கொள்ளவும் உதவக்கூடிய நூல்களை இத்திணைக்களம் அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் ''இந்துசமய, விழாக்களும் விரதங்களும்'' என்னும் இந்நூல் இவ்வாண்டு வெளியிடப்படுகின்றது.

எமது சமயத்தின் முக்கிய விழாக்களையும், விரதங்களையும் பற்றிய அரிய தகவல்கள் இந்நூலில் இடம் பெறுகின்றன. இவற்றின் உட்பொருளை அறிந்து சமய நெறியைப் பேணுவதற்கு ஏற்ற வழிகாட்டியாக இந்நூல் அமைகிறது.

பிரம்மஸ்ரீ குஹானந்தசர்மா சிறந்த சமய பக்தர். பல்வேறு சமயக் கிரியைகளிலும், ஆலய கிரியைகளிலும், பங்கு கொண்டு சமயப் பணி ஆற்றுபவர். சமயம் சார்ந்த கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதி வருபவர். சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். எமது திணைக்கள வெளியீடான இலங்கை திருநாட்டின் இந்து திருக்கோயில்கள் என்ற நூலின் ஆசிரியர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றியவர்.

இந்துசமய விழாக்கள், விரதங்கள் பற்றி வானொலியில் இவர் ஆற்றிய உரைகள் பின்னர் பத்திரிகைகளில் கட்டுரைகளாக வெளியிடப்பட்டன. இப்போது அவை நூலுருவில் எம்மால் வெளியிடப்படுகின்றன.

அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக வெளியிடப்படும் இலவச நூல்களின் வரிசையில் இந்நூல் மூன்றாவது வெளியீடாகும்.

''இந்துசமய, விழாக்களும் விரதங்களும்'' என்ற நூல் வெளியிடப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி அதற்கான ஆலோசனைகளையும், ஊக்கத்தையும் நல்கிய இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களுக்கும், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்களுக்கும் பிரம்மஸ்ரீ குஹானந்தசர்மா அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

**க. சண்முகலிங்கம்**
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

20 DEC 2021
LIBRARY
705035

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆனந்த தாண்டவம் அமைந்த தைத்திங்கள் | 1 |
| சிவ சிந்தனையைத் தரும் மாசி | 5 |
| நல்வழி காட்டும் பங்குனி | 10 |
| புதுப் பொலிவைத் தரும் சித்திரை | 14 |
| அன்பும் அருளும் நிறைந்த வைகாசி | 21 |
| ஆனித் திருமஞ்சனம் | 26 |
| குதூகலம் கொண்ட ஆடி | 31 |
| மங்கள வாழ்வு நல்கும் ஆவணி | 37 |
| அம்பாள் வழிபாடு கொண்ட புரட்டாதி | 43 |
| தத்துவங்களை விளக்கும் ஐப்பசி | 48 |
| சிவதரிசனத்தைக் காட்டும் கார்த்திகை | 53 |
| நற்பெருவாழ்வை நல்கும் மார்கழி | 59 |
| விசேட விரத காலத் திருமுறைகள் | 63 |
| நல்வாழ்வுக்கான திருமுறைகள் | 66 |

உ

சிவமயம்

# முழுமுதற்கடவுள் ஆனந்ததாண்டவ நடனம் புரியும் தைத்திங்கள்

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது முதுமொழி. தை மாதப் பிறப்பன்று தமிழ் மக்கள் தைப்பொங்கல் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவர். நெல் அறுவடை முடிந்ததும் மழையையும் வெய்யிலையும் அவ்வப்போது கொடுத்து உதவும் பகலவனுக்கு இப்பொன்னாளில் நாம் தீம்பாற்பொங்கல் பொங்கி வழிபாடுகள் செய்கின்றோம். தைப்பூசத் திருநாளில் ஸ்ரீ நடராஜப் பெருமான் சகல ஜீவராசிகளும் உய்யும் வண்ணம் ஆனந்த தாண்டவ நடனம் ஆடுகின்றார். தை முதல் ஆனி முடிய உள்ள காலத்தில் சுப வேளை பார்த்து சுபகருமங்களைச் செய்தல் உத்தமமானது. ஆகையால் பலவழிகளிலும் தை மாதம் ஒரு தலைசிறந்த மாதமாக அமைகின்றது.

## தைப்பொங்கல்

தை மாதப் பிறப்பன்று சூரியோதயத்தில் எல்லா இல்லங்களிலும் பொங்கல் பொங்கப்படுகின்றது. ஆதலால் இஃது தைப்பொங்கல் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றது. தைப்பொங்கலில் ஆரம்பமாகும் பொங்கல், பட்டிப் பொங்கல், கிழமைப் பொங்கல், மாதப் பொங்கல், பங்குனித் திங்கட் பொங்கல், புத்தாண்டுப் பொங்கல், வைகாசிப் பொங்கல் என்று பலவாறு விரிவடைகின்றது.

தைப்பொங்கலன்று வீடு வாசல் கழுவி, மெழுகி அழகிய வண்ணவண்ணக் கோலங்கள் போடப்படுகின்றன. சூரிய இரதம், மார்கழிப் பிள்ளையாருக்கான ரதம் என்பன போடப்படும் கோலங்களுள் அடங்கும். மாவிலை, தோரணம், மலர்மாலை என்பன கொண்டு அலங்கரிக்கப்படும். வீட்டில் உள்ள அனைவரும் குளித்துப் புத்தாடை உடுத்துத் தைப் பொங்கல் பொங்கத் தம்மைத் தயார் படுத்திக்கொள்வர்.

இல்லத் தலைவி பாலை விட்டுப்பொங்க, பால் பொங்கி வழியும் திசை கண்டு எல்லோரும் இன்புறுவர். பால் பொங்கியவுடன் சிறுவர் வெடி கொளுத்தி மகிழ்வர். குடும்பத் தலைவன் பருப்புடன் கலந்த அரிசியைப் பொங்கல் பானையுள் போட்டுப் பொங்கவிடுவார். சர்க்கரை, ஏலம், சிறிதளவு இஞ்சிச்சாறு, கருப்பஞ்சாறு என்பனவும்

பொங்கல் பானையுட் சேர்க்கப்பட்டு நன்றாகத் துளாவிப் பொங்கல் பொங்கப்படும். சில இல்லங்களில் பால், பருப்புடன் கலந்த அரிசி என்பன மட்டும் கொண்டு பொங்கப்படும். இது பாற்பொங்கல் எனப்படும்.

இல்லத் தலைவன் தலைவாழையிலையில் பொங்கலைப் படைப்பார். அதன் பின்பு பிள்ளையாருக்கு மோதகம், மற்றும் சிற்றுண்டிகள், பழவகை, இஞ்சி, மஞ்சள், கரும்பு என்பனவும் நைவேத்தியத்துக்கு வைக்கப்படும். பூசை வழிபாடுகள் நடந்து சூரிய வழிபாடு அடுத்து ஆரம்பமாகும். சிவப்புப் பூவும் நீரும் கொண்டு பொங்கல் செய்த இடத்தை மூன்று முறை சுற்றி சூரியனைப் பார்த்து பூவையும் நீரையும் போட்டு இல்லத்தில் உள்ளோர் சகலரும் நமஸ்காரஞ் செய்வர். அதன் பின்பு கோவிலுக்குச் சென்று வழிபாடுகள் செய்தபின் எல்லோரும் பொங்கலையும் சிற்றுண்டிகளையும் அயலில் உள்ளவர்களுக்கும் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்வர்.

### கோவில் பொங்கல்

தை மாதம் பிறக்கும் வேளையில் கோவில்களில் சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுகின்றது. குல தெய்வ வழிபாட்டின் மேம்பாடு காரணமாக அவ்வேளையில் கோவில்களில் பொங்கல் பொங்கப்பட்டுப் படையல் செய்து நைவேதனஞ் செய்யப்படுகின்றது. மாதப் பிறப்புப் பொங்கல் என்ற வகையில் பல ஆலயங்களில் இப்படியான பொங்கல் மாதாமாதம் நடைபெறுவதை நாம் காணமுடியும்.

### மார்கழிப் பிள்ளையார்

இவ்வாறான வழிபாடுகள் இனிது நிறைவேறியதும் மார்கழி மாதத்தில் தினமும் சாணத்தால் பிடிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட பிள்ளையாரைச் சிறிய தேரிலோ, பல்லக்கிலோ வைத்து அவருக்கெனப் படைக்கப்பட்ட மோதகம், மற்றும் பழவகைகளோடு சங்கு சேமக்கலத்துடன் வீதிவலம் வந்து கேணி அல்லது குளத்துள் போட்டு வழிபாடுகள் இனிது நடைபெறும்.

### பட்டிப் பொங்கல்

தைப்பொங்கலின் மறுநாள் பட்டிப் பொங்கல் இடம் பெறும். பட்டி பெருகினால் வாழ்வு வளம் பெறும்; ஆகவே பசு, காளை முதலானவற்றை இத்தினத்தில் குளிப்பாட்டுவர்: பல இடங்களில் கோ பூஜை இடம் பெறும். பட்டி உள்ள இடத்தில் பொங்கி வழிபாடுகள் செய்து பொங்கல், பழவகை முதலானவற்றை அவற்றிற்கு உண்ணக் கொடுத்துச் சகலரும் மகிழ்வது பட்டிப் பொங்கல் ஆகும்.

## கன்றுப் பொங்கல்

பட்டிப் பொங்கலின் மறுநாள் இப்பொங்கல் சில இடங்களில் இடம் பெறுகின்றது. கன்றுகளுக்குக் குறிசுடல், நாணயங் குத்துதல் போன்றவை இந்நாளில் பொங்கல் செய்து வழிபாடுகள் ஆனபின் இடம்பெறுகின்றன.

## தை அமாவாசை

உத்தராயணத்தில் வரும் முதல் அமாவாசை இதுவாகும். ஆகவே இத்தினத்தில் பிதுர்க்கடனை நிறைவேற்றுதல் வேண்டும். பிதுர்கள் திருப்தியடைய எள்ளு, தர்ப்பை, துளசி கொண்டு நீர் இறைத்து வழிபாடுகள் செய்து குருவுக்கு உபசரணை செய்து அவரின் ஆசியையும் பெற்று வாழ்வது நன்று.

## தைப்பூசம், பௌர்ணமி

தைப்பூசத் திருநாளிலே தை-த-தை என்ற லயத்துக்கு ஏற்ப ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பிகையுடன் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆனந்த தாண்டவ நடனம் ஆடுகின்றார். வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூர்த்திகள் தில்லை மூவாயிரவர், ஏனைய அடியார்கள் எல்லோரும் இந்நடனத்தை. இந்நாளிற்கண்டு ஆனந்தக்கடலில் மூழ்கினார்கள். அதனால் அவன் தாழ் வணங்கி அடியார்கள் அனைவரும் தைப்பூச நாளிலே அவனருளுக்காக இறைஞ்சுகின்றனர். தைப்பூசம் பௌர்ணமியுடன்கூடி வந்தால் மிக்க விசேஷம். ஆதலின் இத்தினம் ஸ்ரீ நடராஜர், அம்பிகை, முருகன் ஆகியோருக்கு உகந்த நன்னாள் ஆகும். இந்நாளில் எல்லாச் சைவ ஆலயங்களிலும் விசேஷ வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் மணவாளக் கோலப் பெருவிழா தைப்பூசத்தில் நிகழ்வதால் சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனி 1008 சங்குகள் கொண்ட சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு விசேஷ கலசாபிஷேகங்களும் மாலையில் திருவுலாவும் பல்லாண்டு காலமாக நடைபெற்று வருகின்றன.

தைப்பூசத்தையொட்டி திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் லக்ஷசார்ச்சனை அதி விமரிசையாக நடைபெற்று வருவது குறிப்பிடப்பட வேண்டியதொன்று. இலங்கையில் உள்ள எல்லாக் கோவில்களிலும் இவ்வாறான வழிபாடுகள் தைப்பூசத்திலே நடைபெறுகின்றன.

## புராணபடனம்

இலங்கையில் கந்தபுராண படனம் மூன்று மாதங்களுக்கு இடம் பெற்று வருகின்றது. தைமாதத்து வளர்பிறையில் ஆரம்பிக்கும் புராண படனம் பங்குனியில் நிறைவுறும். கோவில் குருக்களும் ஊரில் உள்ள சகல அடியார்களும் முறைப்படி சங்கற்பஞ் செய்து புராணபடனத்தை ஆரம்பித்து வைப்பர். தினமும் புராணபடனம் இடம்பெறும். விசேஷ காலங்களில் அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். சுவாமி திருக்கல்யாணம், முருகன் அவதாரம், சூரபன்மன் வதைப்படலம், தெய்வானை திருமணம், வள்ளி திருமணம் போன்ற காலங்களில் முழுக்கிராமமுமே பெருவிழாக்கோலம் பூணும். புராணபடன முடிவில் சிவாச்சாரியர்கள் திருவமுது செய்யச் சகல பொருட்களையும் அடியார்கள் கொடுத்து உபசரிப்பர். அதேபோன்று சிவனடியார்களுக்கும் திருவமுது செய்ய ஒழுங்குகள் செய்யப்படும். இவ்வாறு பலவிதமான வழிபாட்டு முறைகளைக் கொண்ட புராண படனம் தைமாதத்திலே ஆரம்பிக்கின்றது.

தைமாதச் சதுர்த்தியில் பிள்ளையாரை வழிபடல் வேண்டும். தை மாதத்தில் வரும் முதல் செவ்வாய்க்கிழமை பைரவர் விரதநாள் ஆகும். இந்நாளில் விரதம் இருந்து பைரவரின் அருளைப்பெறுதல் நல்லது.

தை மாதத்தில் வரும் பிரதோஷ நாட்களில் முறைப்படி விரதம் இருந்து கோவில் வழிபாடு செய்து சிவன், அம்பாள், நந்தீஸ்வரர் ஆகியோரின் அருளைப் பெறுதல் உத்தமம்.

தை மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி ஸபலா எனப்படும். இது பாவத்தைப் போக்கும். ஆகவே விஷ்ணுவின் அருளைப் பெற ஏகாதசி விரதம் சிறந்தது. தை மாத சுக்லபக்ஷ ஏகாதசி புத்ரதா ஆகும். இந்நாள் விரதம் புத்திர பாக்கியத்தைக் கொடுக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

கார்த்திகை, சஷ்டி ஆகிய தினங்களில் முருகப் பெருமானை வழிபட்டும் சோம வாரத்தில் சிவ வழிபாடு செய்தும் இஷ்ட சித்திகளைப் பெறலாம்.

சுபக்கிரியைகளான கும்பாபிஷேகம், உபநயனம், கல்யாணம் என்பவை நடைபெறுவதும் உத்தராயணத்திலே தான். தை பிறந்தால் வழிபிறக்கும் என்பர். தைமாத சூரியோதயமே பொங்கலாக மலர் கின்றது. தையிலே முழுமுதற்கடவுள் ஆனந்த தாண்டவ நடனம் புரிகின்றார். மக்களின் மங்களகரமான கிரியைகள் நடைபெறுகின்றன. ஆகவே தைமாதத்து விசேஷங்களைப் பக்தி சிரத்தையுடன் கொண் டாடி இறையருளுடன் நல்வாழ்வு வாழ்வோமாக!

# சிவ சிந்தனையைத் தரும் மாசி

'சிவாய நம' என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை. முழுமுதற்கடவுளான சிவபெருமானை ஓம் நமசிவாய என்று நாம் சதாகாலமும் சிந்தித்து இருந்தாலும் மாசி மாத சிவராத்திரி தினத்தில் சிவ வழிபாட்டினை முத்தி பெறுவகற் காக வழிபடுகின்றோம். மாசி மகம், ஸ்ரீ நடராஜப் பெருமான் அபிஷேகதினம் முதலான பல்வேறு திருநாட்களைக் கொண்டு மாசி மாதம் விளங்குகின்றது.

## மஹா சிவராத்திரி

இந்நோக்கில் மஹாசிவராத்திரி பற்றி இப்போது நாம் சிந்திப் போம். மஹா என்றால் பெரிய, மஹோன்னத எனப் பொருள் படும். சிவன் என்றால் துக்கம், இன்னல், இடர் ஆகியவைகளை இல்லாமற் செய்பவன் என்று கூறலாம். இராத்திரி என்றால் சுகத்தைக் கொடுப்பது, துக்கத்தைப் போக்கிச் சுகத்தைச் செய்து, சுகத்தைக் கொடுப்பது எனக் கொள்ளலாம். ஆனமையின் மஹா சிவராத்திரி எமக்கு நல்வாழ்வைக் கொடுக்கின்றது என்பது தெளிவு.

சிவராத்திரி என்றால் நித்திய சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி என விரிவடைகின்றது. மாலை 4. 30 முதல் 6. 30 வரையுள்ள சுபவேளை சிவதர்சனத்துக்கு உகந்த காலம் ஆகும். அமாவாசையும் சோமவாரமும் கூடிவரின் அந்நாள் யோக சிவராத்திரி எனப்படும். மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்திசியில் வருவது மாத சிவராத்திரி. மாசி மாத கிருஷ்ண பக்ஷ சதுர்த்திசியில் வருவது மஹா சிவராத்திரியாகும்.

சிவராத்திரி பற்றி அப்பர் சுவாமிகள் அழகாகக் கூறுகின்றார்.

''செங்க ணானும் பிரமனும் தம்முள்ளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேன்என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.''

''இக்காட்சியைத் திருமந்திரம் இவ்வாறு கூறுகின்றது.

பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதமை யாலே
பிரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி ஆற்றுகின் றாரே''

ஆம்! பிரம்மாவும் விஷ்ணுவும் தம்முள்ளே யார் பெரியார் என்பது பற்றிக் கருத்து வேற்றுமை கொண்டு சிவபெருமானிடம் சென்றபோது அவர் சிவலிங்கத் திருமேனியராகி அதனுள்ளே பெரும் ஜோதியாக அவர்களுக்குக் காட்சி கொடுத்தார். ஜோதியானது ஆதியும் அந்தமும் இல்லாத பெருஞ் ஜோதியாகக் காட்சியளித்தது. பாதாளம் முதல் மேல்லோகம் வரை ஜோதி காணப்பட்டது. இந்தப் பிளம்பதோர் மேனியின் அடியையோ இன்றேல் நுனியையோ யார் காண்கின்றாரோ அவரே பெரியர் என ஓர் போட்டிப் பரீட்சையைச் சிவபெருமான் செய்தார். ஈற்றில் பிரம்மாவும் விஷ்ணுவும் அடியையோ, முடியையோ காணாது நான் என்ற மமதை நீங்கி சிவபெருமானை வழிபட, சிவலிங்கத் திருமேனியுள் நான் உள்ளேன் என அவர்களுக்கு உபதேசித்தருளினார்.

சிவராத்திரி பற்றி கந்தபுராணங் காட்டுவதைக் காண்போம். திருக்கயிலாயத்தில் உமை அம்மை சிவபெருமானது 2 கண்களையும் விளையாட்டாகப் பொத்தவே உலகம் முழுவதும் இருளடைந்தது. இக்குற்றம் நீங்க உமை அம்மை நான்கு ஜாமமும் சிவபூஜை செய்தாள். மஹா சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபடும் அடியாரின் இன்னல் இடரினைக் களைய வேண்டும் எனவும் உமை அம்மை சிவபெருமானிடம் விண்ணப்பஞ் செய்தார். எனவே இது சிவ சக்தி அம்சங்கொண்ட நாளாகிற்று. மாசி மாத திரயோதசி அம்பிகை வடிவானது. மாசி மாத சதுர்த்தசி சிவ வடிவங் கொண்டதாயிற்று. ஆகவே மஹா சிவராத்திரி தினம் சிவ சக்தி அம்சங்கொண்ட நிறைந்த நாளாயிற்று. சிவலிங்கத் திருமேனியும் இதனையே கூறுகின்றது எனலாம்.

சிவபெருமான் சிவலிங்கத் திருமேனியில் ஜோதியாகத் தோன்றிய முகூர்த்தம் லிங்கோற்பவர் முகூர்த்தம் ஆகும். இஃது இரவு 11.30 முதல் 12.15 வரையுமுள்ள காலம். சிவாலயப் பின் பிரகாரத்தில் நேர் மேற்கே தீர்க்க விருத்தமாக அதாவது வட்டவடிவாக அமைந் துள்ளதே லிங்கோற்பவ மூர்த்தியாகும். இங்கே ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் மூர்த்தியை நாம் காண்கின்றோம். ஆகவே தான் சிவாலயங்களில் ருத்திராபிஷேகம் செய்யுமுன் சிவாச்சாரியார் ஒரு தியான சுலோகம் சொல்லுவார். அதன் அர்த்தம் யாதெனில் ''பாதாளம் முதல் ஆகாச பரியந்தம் உள்ள மூர்த்திக்கு அபிஷேகஞ் செய்யப்போகின்றேன்'' என விண்ணப்பஞ் செய்வதாக இஃது உள்ளது.

சிவராத்திரி தினத்தின் முன்தினத்தன்று சிவபூஜை செய்தபின் ஒரு வேளை உணவை உட்கொள்ளவேண்டும். சிவராத்திரி தினம் உப வாசமாக இருந்து மறு நாள் அதிகாலை பாறணை செய்தல் வேண்டும். சிவராத்திரி தினத்தில் சந்தியாவந்தனம், ஜபம், சிவபூஜை என்பன

இன்றியமையாதவை. நமச்சிவாயத் திருப்பதிகம், திருநீற்றுத் திருப்பதிகம், சிவநாம பஜனைப் பாடல்களைப் படிக்கலாம், பாராயணஞ் செய்யலாம். லிங்கபுராணத்தைச் சிவராத்திரியன்று படித்தல் நன்று.

சிவராத்திரியன்று இரவு சிவவழிபாடு இன்றியமையாததொன்று. சிவாலயங்களில் நான்கு ஜாமப் பூஜைகளும் சிறப்புற இடம் பெறும். முதலாம் ஜாமத்தில் பஞ்சகவ்யம், சந்தனக்குழம்பு என்பன சாத்தப்படும், பயற்றன்னம் நைவேதிக்கப்படும். வில்வம் இலையால் அர்ச்சிக்கப்படும். இரண்டாம் ஜாமத்தில் பஞ்சாமிர்தம், அகிற்குழம்பு என்பன சாத்தப்பட்டு பாயாசன்னம் நைவேதிக்கப்பட்டு தாமரை மலர்களால் அர்ச்சிக்கப்படும். மூன்றாம் ஜாமம் ஆன லிங்கோற்பவர் காலத்தில் தேன், பச்சைக் கற்பூரம் என்பன சாத்தப்பட்டு எள்ளுச் சாதம் நைவேதிக்கப்பட்டு ஷண்பகம், ஜாதிமுல்லை, வில்வம் இலை என்பனவற்றால் அர்ச்சிக்கப்படும். நான்காம் ஜாமத்தில் கருப்பஞ்சாறு, குங்குமப்பூ என்பன சாத்தி சுத்த அன்னம் நைவேதனஞ் செய்யப்பட்டு நந்தியாவர்த்தை, நீலோற்பலம் என்பனவற்றால் அர்ச்சிக்கப்படும். பாறணை செய்யுமுன் சிவாச்சாரியாருக்கும் சிவனடியாருக்கும் திருவமுது செய்ய ஒழுங்குகள் செய்தல் வேண்டும். அன்று காலை சிவாலய தர்சனத்தின்பின் பாறணை செய்து மஹா சிவராத்திரி விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம். இவ்விரதம் 24 அல்லது 12 வருடங்களுக்குத் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படல் வேண்டும்.

சிவராத்திரியானது எவ்வகையில் சிவசக்தி அம்சங்கொண்டதோ அதேபோல வில்வம் இலையும் சிவசக்தி அம்சங்கொண்டு விளங்குகின்றது. வில்வார்ச்சனை சிவராத்திரிக்கு முக்கியமானது. ''திரிதலம் திரிகுணாகாரம் திரிநேத்ரம் சத்ராயுதம், திரிஜென்ம பாபசம்ஹாரம், ஏக வில்வம் சிவார்ப்பணம்''. என்பது அது.

### மாசிமகம்

அடுத்து நாம் பார்க்கவிருப்பது மாசி மகம் பற்றியேயாகும். மாசி மகம் புண்ணிய தீர்த்தம் ஆடல், விரத அனுஷ்டானங்களுடன் வழிபாடு செய்தல் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றது. தக்கனது மகளான தாக்ஷாயணி பிறந்தது மாசி மாத மக நக்ஷத்திரத்திலேயாம். முன்னொருநாள் வருண பகவான் பிரம்ம ஹத்தி தோஷத்தினால் பீடிக்கப்பட்டு இருந்தவேளை அவர் கட்டப்பட்ட நிலையில் சமுத்திரத்தில் இடப்பட்டிருந்தார். பின்னர் தேவர்கள் சிவபிரானை வேண்டவே அவர் எழுந்தருளி வந்து வருணபகவானை விடுவித்தார். இந்நாள் மாசி மகத் திருநாளாகும். இவ்வேளையில் சிவபெருமானிடம் வருணபகவான் ஒரு வேண்டுதல் செய்தான்.

எவ்வண்ணம் சமுத்திர நீரில் இருந்தமையால் தான் எம்பெருமானின் அருளைப் பெற்றானோ அதேபோன்று மாசி மக நாளில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வழிபாடு செய்வோருக்கும் அருளல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். மாசி மக நட்சத்திரம் பிரகஸ்பதியுடன் கூடி கும்பராசியுட் பிரவேசிக்கும்போது மஹா மகம் நிகழ்கின்றது. வடஇந்திய இந்துக்கள் கும்பமேளா எனக் கூறி இத்தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடி கங்கா தீர்த்தம் ஆடுவர். அதேபோல தென்இந்தியக் கும்பகோண க்ஷேத்திரத்தில் உள்ள புண்ணிய தீர்த் தத்தில் சகலரும் நீராடி சிவ வழிபாடு செய்வர். இதனையொட்டி எல்லாச் சிவாலயங்களிலும் விசேஷ பூஜை மாசி மகத்தில் நடை பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மாத்தளை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மாசிமக உற்சவம் பஞ்சரதபவனி யுடன் சிறப்புற நடைபெறுகின்றது.

மாசி மாத வளர்பிறைச் சதுர்த்திசியில் ஸ்ரீ நடராஜப் பெருமா னின் அபிஷேக தினம் வருகின்றது. ஸ்ரீ நடராஜர் வடிவம் உலகம் இயங்க ஏதுவாயிருப்பது ஆகும். ஆகவே இத்தினத்தில் ஸ்ரீ நடராஜர் அபிஷேக தர்சனம் சிறப்பானது.

இனி நாம் பிரதோஷ விரதத்தையும் குறிப்பாகச் சனிப்பிரதோஷ விரதத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாதாமாதம் வளர்பிறை, தேய் பிறை ஆகிய இவ்விரு தினங்களிலும் வரும் திரயோதசித் திதியில் மாலை 4.30 முதல் 6.00 மணிவரை உள்ள காலம் பிரதோஷ காலம் ஆகும். இக்காலம் சிவதர்சனத்துக்குச் சிறப்பானதொன்று. விரத அனுஷ்டானங்களுடன் பிரதோஷ வழிபாடு செய்தால் நல் வாழ்வு கிடைக்கும். பிரதோஷம் சனிக்கிழமைகளில் வரின சனிப்பிர தோஷம் எனப்படும். இது மிகமிகச் சிறப்பான தினம். பாற்கடலைக் கடைந்த காலை நஞ்சு வரவே அதற்கஞ்சித் தேவர்கள் சிவபெருமானி டம் முறையிட சிவபெருமான் நஞ்சை உண்டு நஞ்சுண்ட கண்டனானது சனிக்கிழமையேயாகும். திரயோதசியில் ஆடிய நடனத்தையும் சந்தியா காலத்தில் ஆடிய சந்தியா நடனத்தையும் சனிப்பிரதோஷ காலத்தில் நாம் கண்டு வழிபடலாம். பிரதோஷ காலம் ஒரு பகலின் முடிவாகவும் சந்தியா காலத்தின் ஆரம்பமாகவும் அமைகின்றது. உலகம் ஒடுங்க நமது மனமும் ஒடுங்குகின்றது. அவ்வேளை சந்தியா கால ஆரம்பமாதலின் சந்தியாவந்தனம், ஜபம், சிவ வழிபாடு என்பன வற்றிற்கு உகந்ததாக உள்ளது.

மாசியில் வரும் அமாவாசை நாளில் பிதுர் தர்ப்பணஞ் செய்தல் வேண்டும். பௌர்ணமி தினத்தில் விரதமிருந்து சிவ, அம்பாள் தர்சனஞ் செய்தல் உத்தமம். கார்த்திகை, சஷ்டித் தினங்களில்

விரதமிருந்து குமாராலய தர்சனம் செய்யலாம். சதுர்த்தியில் விநாயகரை விரதமிருந்து வழிபடவேண்டும். மாசி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி ஷட்திலா எனப்படும். இத்தினத்தில் விரதமிருந்து எள்ளை அரைத்துப் பூசிக் குளித்தல், எள்ளைத் தானஞ் செய்தல், எள் ஹோமம், எள்ளு, நீர் தானம், எள்ளுக் கலந்த உணவு உண்ணல் என்பன கூறப்பட்டுள்ளவை. பிராம்மண போஜனம், அடியார் போஜனம் என்பன இந்த ஏகாதசிக்கானவை. மாசிச் சுக்கில பக்ஷ ஏகாதசி ஜயாவாகும். மும்மலங்களினின்றும் விடுபட்டு ஸ்வர்க்கத்திற்கு இவ் விரதம் வழிவகுக்கும். ஆகவே ஏகாதசி நாட்களில் விஷ்ணு ஆலய வழிபாட்டை விரத அனுஷ்ட்டானங்களுடன் செய்து ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அனுக்கிரகத்தைப் பெறலாம்.

மாசி மாத மஹோன்னதத் திருநாட்களில் சுவாமி தரிசனஞ் செய்து நல்வாழ்வு வாழ்வோமாக!

•

ஆலய முகப்பிலும், மண்டப முகப்பிலும் கஜலக்ஷ்மி சிலையை நாம் காணலாம். இருயானைகள் அமிர்த குடம் ஏந்தி லக்ஷ்மிக்கு அபிஷேகம் செய்யும் நிலையிலான வடிவமே இது இருமருங்கிலும் தீப ஜோதிகள் ஒளிவிடும் தெய்வ சந்நிதானம்; ஸ்ரீ லக்ஷ்மி வாசஞ்செய்யும் இடமாகும். பார்க்கும்போதே மங்களகரமான நிலை உள்ளது. ஸ்ரீ லக்ஷ்மியானவள் நாடிவரும் பக்தர்கள் விரும்பும் வரங்களை அளிக்கும் ஆதார சக்தியாகவும் உள்ளாள்.

— **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்**
காஞ்சி காமகோடி பீடம்

# திருமங்கள வாழ்வுக்கு நல்வழிகாட்டும் பங்குனி

பங்குனி மாதம் ஒரு மங்களகரமான மாதமாக அமைந்துள்ளது. பங்குனி பிறக்கும் பொழுதே சுமங்கலிப் பெண்கள் தமது மாங்கல்யச் சரட்டுக்காகவும் கணவனின் ஆயுள் விருத்திக்காகவும் காரடை நோன்பிருக்கின்றனர். பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருமணநாள் பங்குனி உத்திர நாளாகும். ஆகவே பங்குனி மாதத்தை ஒரு தெய்வீகக் களையுள்ள மாதம் எனலாம்.

## காரடை நோன்பு

இந்நோக்கில் காரடை நோன்பு பற்றி நாம் பார்ப்போம். மாதம் மாதம் பிறக்கும் வேளையில் கோவில்களில் சங்கிராந்தித்தீர்த்தம் நடைபெறுவதை நாம் அறிவோம். அதாவது ஒரு மாதம் முடிந்து மறு மாதம் பிறக்கும் வேளையே சங்கிராந்திக் காலம் ஆகும். தோஷநிவர்த்திக்காகவும் சௌபாக்கிய வாழ்வுக்காகவும் இத்தகைய வழிபாடு அமைகின்றது.

காரடை நோன்பும் இக்காலத்திலேயே நோற்கப்படுகின்றது. சாவித்திரி தனது கணவன் சத்தியவானின் நீண்ட ஆயுளை வேண்டி நோற்ற விரதம் இதுவாகும். ஆகையினால் சுமங்கலிகள் இவ்விரதத்தை வழுவாது நோற்று வருகின்றனர்.

பங்குனி மாதம் பிறக்க இருமணி முன்னதாகச் சுமங்கலிகள் அனைவரும் தலையிலே தோய்வர் மாத சுகவீனம் காரணமாகப் பெண்கள் 6 ஆம் நாள் உதயத்தில் இருந்தே எந்த ஒரு விரதத்தையும் நோற்கத் தகுதியுடையவர் என்பது கவனிக்கப்படல் வேண்டும். தலையிலே தோய்ந்தபின் புது ஆடையை அல்லது தோய்த்து உலர்ந்த ஆடையை அணிந்துகொள்ளலாம். அதன் பின்பு நோன்புக்கான காரடைகளைச் செய்யும் பணியில் ஈடுபடுவர். காராமணிப்பயறு, சிவப்புப் பச்சை அரிசி மா என்பவற்றைக் கொண்டு இந்த அடை செய்யப்படும். காராமணிப்பயறு இல்லாவிடின் பயறு சேர்த்துக் கொள்ளப்படலாம். உப்புக்கலந்த அடை குறைவாகவும் சர்க்கரை கலந்த அடை நிறையவும் செய்யப்படும். அடைகள் செய்யப்படும் போது சில அடைகள் நீள்சதுரமாகவும் பல வட்டவடிவின தாகவும் இருத்தல் வேண்டும். இதேவேளை நோன்புச் சரட்டு நூலையும் அளவுக்கு ஏற்றவகையில் தயார் செய்து கொள்ளல் வேண்டும்.

அடுத்தபடியாகக் காரடை நோன்பிற்கான பூஜைகள் ஆரம்பமா மாகும். முதலிலே விக்னேஸ்வரபூஜை இடம் பெறும். அடுத்து, கும்பத்திலே ஸ்ரீ காமாக்ஷி அம்பாளை ஆவாகித்து அம்பா ளுக்குச் சகல உபசார பூஜைகளும் நடைபெறும். அத்தர்சனங்களை அடுத்துச் சுமங்கலிகள் வழிபாடு ஆரம்பமாகும்.

ஒவ்வொரு சுமங்கலியும் முதலில் ஒவ்வொரு கோலமிடல் வேண்டும். அவற்றின்மேல் ஒவ்வொரு சுமங்கலியும் ஒவ்வொரு சிறிய வாழை யிலையை வைக்கவேண்டும். நீள்சதுரமாகவும் வட்டவடிவாகவும் தயாரிக்கப்பட்ட உப்புக்கலந்த அடை, சர்க்கரை கலந்த அடை என்பன அந்த வாழையிலையிலே வைக்கப்படும். உருகாத வெண்ணை வைக்கப்படும். அத்தோடு வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், குங்குமம், பூ, மலர்ச்சரம் என்பன வாழையிலையின் தலைப் பில் வைக்கப்படும். காரடை நோன்புச் சரடும் இத்துடன் வைக்கப் படும். ஸ்ரீ காமாக்ஷி அம்பாளை வழிபட்டு தத்தமது இலையிலே உள்ளவற்றை எல்லாம் ஒவ்வொரு பெண்ணும் நைவேதனஞ் செய் வர். இதன்பின் ஒவ்வொரு சுமங்கலியும் கற்பூர ஹாராத்தி செய்து சுமங்கலிப் பிரார்த்தனை செய்வாள்.

இதனை அடுத்து வீட்டுத் தலைவியாகவுள்ள சுமங்கலிப்பெண் ஏனைய சுமங்கலிகளுக்குத் திருநீறு. சந்தனம், குங்குமம், மலர்ச்சரம் என்பனவற்றை வழங்குவாள். இனி முக்கியமான வைபவம் இடம் பெறும். அதுவே நோன்புச் சரடு அணியும் சுபவேளையாகும். ஒவ் வொரு பெண்ணும் வீட்டுத் தலைவிமுன் வணங்கி நிற்கத் தலைவி அவளை ஆசீர்வதித்து அவளின் கழுத்திலே நோன்புச் சரட்டைக் கட்டுவாள். அப்போது,

''உருகாத வெண்ணையும் ஓர் அடையும் நூல் நூற்று என் கணவர் என்னை ஒருபோதும் பிரியாதிருக்க வேண்டும்'' எனக் கூறி நோன்புச் சரட்டைப் பெற்றுக்கொள்வாள்,

பின்பு, கணவனுக்கு நீள்சதுரக் காரடையும் வெண்ணையும் எடுத்து வைக்கப்படும். இதன் பின்பு சுமங்கலிகள் பிரசாதத்தை ஏனையோருக்கும் விநியோகித்துத் தாமும் உண்டு காரடை நோன்பை நிறைவு செய்வர். மறுநாள் பசு தர்சனம், பசுவுக்கு அடை, வாழைப் பழம் கொடுத்துப் பசுவை வணங்குதல் என்பன சௌபாக்கிய வாழ்வுக்காக இடம் பெறுகின்றன. காரடை நோன்பைத் திருமணம் ஆகாத இளம் பெண்களும் நோற்று வருகின்றனர். தமக்கு நல்ல நிறைந்த கணவன் வந்தாகவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் இவ்வழிபாடு நடை பெறுகின்றது.

### பங்குனித் திங்கள்

இனி நாம் பங்குனித் திங்களை நோக்குவோம். பங்குனித் திங்கள் என்றதும் கண்ணகி வழிபாடு எம்மனதில் முதலிலே தோன்றும். கற்புக்கரசியாம் கண்ணகிக்கான பொங்கல் வழிபாடுகள் பங்குனித் திங்கள் அன்று பொங்கல் பொங்கி, படையல் செய்து கோலாகலமாக நடைபெறுகின்றது. யாழ்ப்பாணம், மட்டுவிலில் உள்ள பிரசித்தி பெற்ற பன்றித்தலைச்சி அம்பாள் கோவிலிலே பல்லாண்டு காலமாகப் பங்குனித் திங்கள் கொண்டாடப்பட்டு வருவது ஈண்டு குறிப்பிடற் பாலது. பங்குனி மாதத்தில் வரும் எல்லாத் திங்கட்கிழமைகளிலும் இவ்வாறான வழிபாடுகள் இங்கு இடம்பெற்று வருகின்றன. முழு ஊருமே திரண்டு இம்மகோன்னத நாளைக் கொண்டாடுவதால் பங்குனித் திங்கள் எல்லாமே தனித்துவம் வாய்ந்தவையாக உள்ளன. மட்டுவிலுக்குப் பெயர் போன வெள்ளை நிற முட்டிக் கத்தரிக்காய் காய்ப்பதும் இக்காலத்திலே தான். ஆகையினால் பொங்கலுடன் வெள்ளை முட்டிக் கத்தரிக்காய்க்கறி அல்லது பச்சடி என்பனவும் தயாரிக்கப்பட்டு நைவேதனம் செய்யும் வழக்கம் இன்றும் அங்கு இருந்துவரும் முறையாகும்.

### பங்குனி உத்திரம்

பங்குனி உத்திரத்தை அந்தமாகக் கொண்டு சிவாலயங்களில் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. கொழும்பு ஸ்ரீ பொன்னம் பலவாணேஸ்வரர் ஆலய ஸ்ரீ ஸ்வர்ண புஷ்கரணித் தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தோற்சவம் பங்குனி உத்திரத்தில் நடைபெறு கின்றது. அதற்கு முதல் நாள் பஞ்சரத உற்சவம் சிறப்பாக நடை பெறும். அதேபோல திருமலை பத்திரகாளி ஆலயத்தில் மூன்று தேர் ரத பவனியும் மறுநாள் சமுத்திர தீர்த்தமும் உள்ளது. ஏனைய எல்லா ஆலயங்களிலும் இவ்வழமை உண்டு.

மதுரை மாநகரின் தேவியான ஸ்ரீ மீனாக்ஷி அம்மை ஸ்ரீ சுந்த ரேஸ்வரப் பெருமானைத் திருமணஞ் செய்த நன்னாள் பங்குனி உத்திரம் ஆகும். இந்நாளைத் திருமண விரதம் எனவும் அழைத்து விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பங்குனி உத்திரமும் பௌர்ணமியும் கூடிவரும் நாள் கல்யாண விரதத்துக்கான நாள் ஆகும். அத்தோடு சாஸ்த்தா வழிபாட்டுக்கும் இது சிறந்த நாள் ஆகும்.

பங்குனி மாதத்தில் வரும் அமாவாசை. பௌர்ணமி ஆகிய தினங்களில் விரதம் பிராமண போஜனம் என்பன செய்து பிதுர்களைத் திருப்தியடையச் செய்யலாம். கார்த்திகை, சஷ்டித் தினங்களில்

முருகனையும் சதுர்த்தியில் விநாயகரையும் விரத அனுஷ்டானங்களுடன் வழிபட வேண்டும். பிரதோஷ காலத்தில் பிரதோஷ வழிபாடு செய்தல் நன்று. பங்குனிக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி விஜயா எனப்படும். இவ்விரதம் அவரவர் விருப்பங்களை நிறைவு செய்யவல்லது. துன்பக்கடலை நீக்கவல்ல இவ் விரததினத்தில் விஷ்ணு பூஜையை அடுத்து ஒரு துறவிக்கு அன்ன மளித்து உபசரித்தல் நல்லது. இம்மாத சுக்ல பக்ஷ ஏகாதசி ஆமலகீ எனப் பெயர் பெறும். அன்று விரதமிருந்து நெல்லிமரத்தைப் பிரதக்ஷிஞ் செய்தல் வேண்டும். இவ்வாறு விஷ்ணு வழிபாட்டினை மேற்கொள்ளலாம்.

இதுவரை பங்குனி மாதத் திருநாட்களை நாம் பார்த்தோம். விரத அனுஷ்டானங்களுடன் சுவாமி தர்சனஞ் செய்து நல்வாழ்வு வாழ்வோமாக!

சூரியன் உதிக்கும், மறையும். அதற்கு அழிவே கிடையாது ஆக்கம், தூக்கம், அழிவு என்பன மனிதனுக்கே உண்டு. மனிதனை நல்லவனாக ஆக்குவதற்கே சமயங்கள் தோன்றியிருக்கின்றன. இறைவனைத்தூய்மையான மனத்தோடுவணங்குங்கள்! துன்பம் அகன்று இன்பம் பெறுவீர்கள்!

— **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்**
காஞ்சி காமகோடி பீடம்.

# புதுப் பொலிவைத் தரும் சித்திரை

சித்திரைப் புத்தாண்டை வருடாவருடம் இந்துக்களாகிய நாம் கொண்டாடி வருகின்றோம். இந்நாள் எமக்கு ஒரு மங்களகரமான நாளாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மரபிற் கமையப் புத்தாண்டில் புதிய விஷயங்களைச் சகலரும் எதிர்பார்ப்பது வழக்கம். புத்தாண்டு புலருமுன் அவ்வாண்டுக்கான பஞ்சாங்கம் வெளிவருகின்றது. எமது வாழ்வை நல்வாழ்வாக நெறிப்படுத்திக் கொண்டிருப்பது பஞ்சாங்கமேயாம்.

## பஞ்சாங்கம்

இந்நோக்கில் பஞ்சாங்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் பார்ப்போம். ஐந்து அம்சங்களைக் கொண்டதே பஞ்சாங்கம் எனப்படும். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற விடயங்களை அடக்கியதே பஞ்சாங்கம் ஆகும். ஜோதிடர்கள் மேற்கூறிய ஐந்து விடயங்களை முன் வைத்தே ஒரு நல்ல நாளைத் தெரிவு செய்கின்றனர். ஒருவரின் நட்சத்திரம் ஆயிலியம் எனக் கொண்டால் அந்நட்சத்திரத் திற்கேற்ற நாளை மேற்காட்டிய ஐந்து விடயங்களையும் வைத்து ஜோதிடர்கள் நல்ல நாளைத் தெரிவுசெய்கின்றனர். ஒரு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளையின் ஜாதகத்தைக் கணிக்கப் பஞ்சாங்கம் உதவுகின்றது.

வருடம் பிறக்கும் நேரத்தையும் விஷ புண்ணிய காலத்தையும் சங்கிரம தோஷத்தையும் பஞ்சாங்கத்திலே நாம் பார்த்து அங்கு உள்ள அறிவுறுத்தலின்படி நடந்துகொள்ளல் நன்று. சங்கிரமதோஷ நிவிர்த்திக்கு மருத்துநீர் பெரிதும் உதவுகின்றது.

## மருத்துநீர்

ஆகவே புத்தாண்டுக்கே உரித்தான மருத்து நீரை நாம் நோக்குவோம். மருத்து நீரானது தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம் இலை, அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு முதலிய விசேஷ திரவியங்களை நன்னீரிற் காச்சிப் பெறப்படுவதே மருத்து நீர் ஆகும். இது சிவாச்சாரியர்களினால் காய்ச் சப்பட்டு எல்லோருக்கும் விநியோகிக்கப்படுகின்றது. மருத்து நீரை நாம் பெறும்போது சிவாச்சரியாருக்குத் தக்ஷணை கொடுத்து

அவரின் ஆசியைப் பெற்று வாங்குதல் உத்தமம். விஷு புண்ணிய காலத்தில் மருத்து நீரை எமது சிரசிலே தேய்த்து நன்னீரில் நீராடல் வேண்டும்.

## புத்தாடை

இனி, புத்தாண்டுக்கான புத்தாடை அணியும் வைபவம் இடம் பெறும். புத்தாடை உடுக்கும்போதும் அதனை அணிந்தபின் அதன் அழகையும் கண்டு சகலரும் மகிழும் நிலையை இங்கு குறிப்பிடலாம். குலதெய்வங்களுக்கும் தம் இஷ்டப்படி புது ஆடைகளை அணிவித்து வரும் வழக்கம் இன்றும் எம்மிடையே நிலவிவருகின்றது.

## புத்தாண்டுப் பொலிவு

புத்தாண்டு பிறக்குமுன் வீடு, கோவில் முதலானவை கழுவி, மெழுகப்படும். வெள்ளை அடிக்கப்படும். நிற மை பூசப்படும். மாவிலை தோரணம் போடப்படும். வண்ணவண்ணக் கோலங்கள் போடப்படும். இவற்றால் எங்குமே அழகு ததும்பும். அந்நோக்கின் புத்தாண்டு பொலிவுறக் காட்சி அளிக்கும். புத்தாண்டில் புத்தாடைகளையோ, தோய்த்து உலர்ந்த ஆடைகளையோ அணிந்த பின்பே புத்தாண்டுப் பொங்கல் ஆரம்பமாகும்.

இல்லங்களிலே புத்தாண்டுப் பொங்கலானது சூரியோதயத்தை யொட்டியே நடைபெறுகின்றது. குடுப்பத்தலைவி பசும்பாலை விட்டுப் பொங்குவாள். பால் பொங்கும் திசை கண்டு சகலரும் இன்புறுவர். சிறுவர் சிறுமியர் வெடி, மத்தாப்புக் கொளுத்தி மகிழ்வர். அடுத்துக் குடும்பத் தலைவன் பாசிப்பருப்புடன் கலந்த அரிசியைப் பொங்கற் பானையுட் போடுவார். அரிசி வேகும் நிலையில் சர்க்கரையும் சேர்க்கப்பட்டுப் பொங்கல் பொங்கப்படும். பொங்கற் பானையை இறக்குவதற்குச் சற்று முன்பாக கஜு, முந்திரிகை வற்றல், தூளாக்கிய ஏலம், நெய் என்பன எல்லாம் சேர்க்கப்பட்டு நன்றாகத் துளாவிச் சர்க்கரைப் பொங்கல் செய்யப்படும். பின்பு இல்லத் தலைவர் கிழக்குமுகமாக நின்று பொங்கற் பானையைக் கீழே இறக்குவார்.

இதேவேளையில் புதுவருடப் பட்சணங்களைத் தயார் செய்யும் பணியில் பெண்கள் ஈடுபடுவர். முதலில் இனிப்புப் பலகாரம் செய்யப் படும். பின்பு ஏனைய வகை வகையான பலகாரங்கள் செய்யப் படும்.

## வழிபாடு

புத்தாண்டுக்கான வழிபாடு இனி ஆரம்பமாகும். சூரியபகவானுக் கான படையல், பூஜை அறையில் உள்ள சுவாமிகளுக்கான படையல்



University of Kelaniya
20 DEC 2021

என்பனவெல்லாம் தயார் செய்யப்படும். குத்துவிளக்கு, பூரணகும்பம், அஷ்ட மங்கலப் பொருட்கள் என்பன வைக்கப்படும். மஞ்சள் பிள்ளையார் நடுநாயகமாக வீற்றிருப்பார். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வணங்கி நிற்க இல்லத்தலைவன் பிள்ளையார் வழிபாடு செய்து சூரிய வழிபாடும் செய்வார். இதனை அடுத்து வீட்டுச் சுவாமி அறையில் பூஜைகள் இடம்பெறும்.

## கோவில் வழிபாடு

அடுத்து கோவில் வழிபாடு ஆரம்பமாகும். சகலரும் தத்தமது இஷ்ட தெய்வ வழிபாடுகளைக் கோவிலுக்குச் சென்று நிறைவேற்றுவர்.

## சங்கிராந்தித் தீர்த்தம்

புதுவருடமானது எந்நேரத்திற் பிறக்கின்றதோ அதனையொட்டிச் சங்கிராந்தித் தீர்த்தம் கோவில்களில் இடம்பெறுகின்றது. இராசி மண்டலத்திலே சூரியன் 30 பாகையுடைய ஓர் இராசியில் இருந்து அடுத்த இராசிக்குட் பிரவேசித்துச் சங்கமித்தல் மாதப்பிறப்பு எனப் படும். இப்படியான சங்கமிப்பு அல்லது சங்கிரமித்து நடைபெறும் காலத்தில் சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுகின்றது. புது வருடத்தை யொட்டி இப்படியான சங்கிராந்தித் தீர்த்தம் நடைபெறுவதால் இது புத்தாண்டுத் தீர்த்த நாளாக அமைகின்றது. இதன்பின்பே கோவில் களில் புத்தாண்டுப் பொங்கல் இடம்பெறும். புத்தாண்டையொட்டி வீடுகளில் சூரியோதயத்திலும் கோவில்களில் புத்தாண்டு பிறக்கும் நேரத்திலும் பொங்கல் இடம்பெறுவதை நாம் மனதிலிருத்திக் கொள்ளல் வேண்டும். சில கோவில்களில் புத்தாண்டுப் பொங்கல் மாலைவேளையில் இடம்பெறுகின்றது. இது பரம்பரை பரம்பரையாக வந்த வழக்கமாகும். குலதெய்வ வழிபாட்டின் மேம்பாடு காரணமாகப் புத்தாண்டுப் பொங்கல் கோவில்களிற் பல்லாண்டு காலமாக இடம் பெற்று வருகின்றது.

## வேப்பம்பூ

கோவில் தரிசனம் இனிதே நிறைவெய்தியதும் வீடுவந்து சுற்றத் தாருக்கும் உற்றார் உறவினர்க்கும் பொங்கல், சிற்றுண்டி என்பன அவர்களின் வீட்டில் வழங்கப்படும். பின்பு வீட்டில் எல்லோரும் புத்தாண்டு உணவை உட்கொள்வர். புத்தாண்டுக்கான மதிய போசனத் திற் சிறப்பான ஓர் அம்சம் இடம்பெறும். சித்திரை மாதத்திலே பூத்துக் குலுங்கி அழகுடன் நறுமணம் வீசும் வேப்பம்பூ பச்சடியாகத் தயாரிக்கப்படுகின்றது. வேப்பம்பூ வடகமும் செய்யப்படும். மதிய



20 DEC 2021

போசனத்தில் தித்திப்பு, உறைப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு முதலான அறுசுவை உண்டி புத்தாண்டில் முக்கியமானதொன்று.

## கைவிசேஷம்

பஞ்சாங்கம் கைவிசேஷ நேரத்தைக் கூறும். குடும்பத் தலைவர் அவ்வேளையில் வெற்றிலையிலே பாக்கு, நெல், பூ, பணம் என்பன வைத்து வீட்டில் உள்ளவர்களுக்கும் ஏனையோருக்கும் கொடுப்பது கைவிசேஷம் ஆகும். வருஷம் பிறக்கும் வேளையில் கைவிசேஷம் செய்யும் மரபும் உள்ளது.

## புதுக் கணக்கு

வியாபார நிறுவனங்கள் சுபவேளையில் பிள்ளையார் சுழிபோட்டுப் புதுக்கணக்கு எழுதும் வழக்கம் புத்தாண்டில் இடம்பெறும் இன்னொரு விசேஷமாகும். மாணவ மாணவியர் நல்ல நேரத்தில் தமது பாடங்களைப் படிக்கத் தொடங்குவதும் புத்தாண்டிலேயாம்.

மாதா, பிதா, குரு ஆகியோர் தெய்வங்களுக்குச் சமமானவர்கள் ஆவர். புத்தாண்டில் தந்தை, தாய், குரு, ஆசிரியர் முதலியோரை வணங்கி அவர்களின் ஆசியைப் பெறுதல் எமது இன்னொரு மரபாகும்.

சித்திரைப் புதுவருடத்தில் இனசன வீடுகளுக்கும் சினேகிதர் வீடுகளுக்கும் சென்று விருந்துண்டு பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்வதும் நமது வழக்கம் ஆகும்.

## விளையாட்டு

விளையாட்டு, பண்டுதொட்டு சித்திரை வருடப் பிறப்பில் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. போர்த்தேங்காய் அடிப்பது ஒரு விளையாட்டு. கிட்டி அடித்தல், சடுகுடு, தாச்சி மறித்தல் முதலான வைகளும் வருடப் பிறப்பில் இடம்பெறும் பாரிய விளையாட்டுக் களாம். இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள கிரிக்கற், கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களும் இடம்பெற்று வருகின்றன.

## வருடப்பிறப்பு உற்சவம்

கொழும்பு, செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்திலும் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலிலும் வருடப்பிறப்பையொட்டி மஹோற்சவம் நிகழ்ந்து வருடப்பிறப்பன்று இரதோற்சவம் எனப்படும்

தேர்த் திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேகம் நிகழ்ந்து விசேஷ அலங்கார உற்சவம் வருடப்பிறப்பில் நிகழும்போது வடபகுதியில் உள்ள சகல விசேஷ மேளவாத்தியங்களும் இவ்வாலயத்தில் முழுங்குவது ஒரு விசேஷ அம்சம் ஆகும். ஏனைய எல்லா ஆலயங்களிலும் வருடப்பிறப்புக்கான விசேஷ பூஜை, உற்சவம் என்பன நிகழ்ந்து வருகின்றன.

## ஸ்ரீ இராம நவமி

இனி நாம் ஸ்ரீ இராம நவமி பற்றி நோக்குவோம். சித்திரை மாத புனர்பூச நட்சத்திரத்துடன் கூடிய நவமித்திதியில் ஸ்ரீ இராமபிரான் அவதரித்தார். இந்த நாளிலே விசேஷ பூஜை, வழிபாடு, இராமாயண பாராயணம் முதலியன நடைபெற்று எல்லோருக்கும் பிரசாதமாக நீர் மோர், பானகம், சுண்டல் முதலியன விநியோகிக்கப்படும். பல இடங்களில் பெருவிழாவெடுக்கும் வழக்கமும் உள்ளது.

## சித்திரா பூரணை

சித்திரையில் பூமி மேட இராசியில் நிற்கின்றது. பூரண சந்திரன் சித்திரை நட்சத்திரத்துடன் சேர்ந்து முழுக்கலைகளும் பெற்று பூமிக்குத் தனது கிரணங்களைக் கொடுக்கின்றான். வருடத்தில் ஒரு நாளாகிய இந்நாளில் இது நிகழ்வதால் சித்திரா பூரணை முதலிடத்தைப் பெறுகின்றது. தாயை இழந்தவர்கள் இந்நாளிற் பிதுர் விரதம் இருத்தல் வேண்டும் அதேபோன்று அமாவாசையன்று இறந்த தகப்பனாருக்காக விரதம் இருந்து பிதுர்க்கடன்களை நிறைவேற்றுதல் உத்தமம்.

## சித்திர புத்திர நாயனார்

சித்திரா பூரணையையொட்டி அண்டபுவனங்களில் வாழும் சகல ஜீவராசிகளின் கணக்குக்களையும் பார்க்கும் சித்திர புத்திரனாரின் பொருட்டு அவரைத்திருப்திப்படுத்த வழிபாடுகள் செய்வதும், சித்திர புத்திரனார் கதை படிப்பதும் அதன் பின்பு சித்திரைக் கஞ்சி வார்ப்பதும் பண்டுதொட்டு இருந்துவரும் எமது பாரம்பரிய வழக்கம் ஆகும். நரகத்துக்குப் போகாமல் இருக்கவும் யம பயம் இல்லா திருக்கவும் இவ்விரதமும் விழாவும் இடம்பெற்று வருவது குறிப்படப்பட வேண்டியதொன்றாகும். காஞ்சிபுரத்துச் சித்திரபுத்தனார் கோவிலில் சித்திரா பௌர்ணமியன்று விசேஷ விழா நடைபெற்று வருகின்றது. இஃது இவ்வழிபாட்டின் மகத்துவத்தை எமக்கு எடுத்தியம்புகின்றது.

## ஸ்ரீ நடராசர் அபிஷேகம்

சித்திரைத் திருவோணத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேகத் தினம் வருகின்றது. அன்று விரத அனுஷ்டானங்களுடன் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேக தரிசனம் மிகவும் விசேஷமானது.

## அக்கினி நாள்

அடுத்து நாம் அக்கினி நாள் என்றும் காண்டாவனம் என்றும் கூறப்படும் நாட்களைக் கவனிப்போம். சித்திரை மாத இறுதியில் தொடங்கி வைகாசி முற் பகுதியில் முடியும் 21 தினங்கள் அதாவது சித்திரா பூரணையின் மறு நாள் தொடங்கி வைகாசி அமாவாசையை அடுத்து உள்ள 8 ஆம் நாள் வரை உள்ள நாட்களில் அக்கினி நாட்களாம். இக்காலத்தில் சூரிய உஷ்ணம் அதிகமாகவிருக்கும். காற்று அனற்காற்றாக வீசும். தாங்கொணாத வெப்பத்தினால் மக்கள் எல்லோரும் பெரும் கஷ்டத்துக்குள்ளாவர்.

இக்காலத்தின் ஆரம்ப தினத்தன்று சிவலிங்கத் திருமேனியின் மேலே ஒரு பானை தொங்கவிடப்படும். அப்பானையின் அடிப்பாகத்தில் ஒரு சிறு துவாரம் விடப்படும். அந்தத் துவாரத்தில் இருந்து வரும் நூல் சிவலிங்கத் திருமேனியில் படும் படியாக விடப்படும் தினமும் காலைப் பூஜையின்போது பானை நிரம்பத் தண்ணீர் விடப்படும். அந்தத் தண்ணீரானது பானையின் அடிப்பாகச் சிறு துவாரத்திலிருந்து நூல் வழியாக வந்து சிவலிங்கத் திருமேனியில் 24 மணிநேரமும் வந்த வண்ணம் இருக்கும். இதனால் சிவசிங்கத் திருமேனி குளிர்ச்சியடைகின்றது. அத்தோடு அப்பூஜையின்போது தினமும் தயிர்ச்சாதம் சுவாமிக்கு நைவேதிக்கப்பட்டு விசேஷ பூஜை இடம்பெறும். அக்கினி நாட்களால் ஏற்படும் இடர்களைத் தவிர்த்துச் சிவபெருமானின் அருளை வேண்டி இவ்வாறான வழிபாடு நடைபெறுகின்றது. கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரசுவாமி தேவஸ்த்தானத்தில் பல்லாண்டு காலமாக இவ்வாறான வழிபாடு முறைப்படி இடம்பெற்று வருகின்றது. ஏனைய சிவாலயங்களிலும் இவ்வாறான வழிபாடு உண்டு.

சித்திரையில் வரும் சதுர்த்தியில் விநாயகர் விரதத்தையும், சஷ்டி, கார்த்திகைத் தினங்களில் முருகப் பெருமான் விரதத்தையும் பிரதோஷம், சோமவாரம் ஆகிய தினங்களில் சிவ விரதத்தையும் முறைப்படி இருந்து அம்மூர்த்திகளின் பேரருளுக்காக நாம் இறைஞ்ச வேண்டும். சித்திரைப் பரணி பைரவ விரத தினம் ஆகும். சித்திரை

முதற் செவ்வாய்க்கிழமை வீரபத்திரருக்கான விரத நாள் ஆகும். சித்திரைக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி பாபமோசனிகா என்றழைக்கப்படும். இவ்விரதத்தை நோற்றால் பாவம் நீங்கும் என விதியுள்ளது. சித்திரைச் சுக்கில பக்ஷ ஏகாதசியை காமதா என அழைப்பர். இஃது இஷ்டசித்திகளைப் பெற நோற்கப்படுவதாகும். இவ்விரு ஏகாதசி தினங்களிலும் கிரமப்படி மஹா விஷ்ணு விரதம் இருப்பது சிறந்தது.

மானிட வாழ்வில் இன்னல் இடர் என்பது தவிர்க்கமுடியாத தொன்று. எந்தக் கஷ்டம் வந்தாலும் இறைவனைச் சிக்கெனப் பிடித்து முறைப்படி விரத அனுஷ்ட்டானங்களுடன் வழிபட வேண்டும். அவ்வாறு செய்தால் நற்பெரு வாழ்வு எமக்குக் கிட்டும்.

ஆகையினால் சித்திரைப் புத்தாண்டு நம் எல்லோருக்கும் நல்வாழ்வைத் தரவேண்டும் என நாம் எல்லோரும் பிரார்த்திப் போமாக! எல்லோருக்கும் மங்கள வாழ்வு கிட்டுவதாக!

* தவத்துக்கு உதவும் ஸ்தல விருட்சம்.
* தூய்மைக்கு உதவும் தீர்த்தம்.
* கோவிலில் பூஜை நடப்பது தேசத்தின் நன்மைக்காகவே.
* கோவிலில் தீபம் எரிந்தால் நாட்டில் ஒளி பிரகாசிக்கும்.
* கோவிலில் நைவேத்தியம் இல்லையென்றால் நாம் பட்டினி கிடக்க நேரிடும்.
* பக்தி என்னும் ரசம், தூய்மை என்னும் நிலை இருந்தால் அருளைப் பெறலாம்.
* மக்கள் தினமும் கோவில் வழிபாடு செய்தல் வேண்டும் அல்லது வாரம் ஒருமுறையாவது கோவிலுக்குச் செல்லுதல் வேண்டும்,

— **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்**
காஞ்சி காமகோடி பீடம்.

# அன்பும் அருளும் நிறைந்த வைகாசி

வசந்த ருதுவில் வரும் வைகாசி மாதத் திருநாட்களை இங்கு நோக்குவோம். சித்திரையும் வைகாசியும் வசந்த ருதுவைச் சேர்ந்தவை. வசந்த ருது சித்திரையில் தொடங்கினாலும் அதன் முழுப் பெறுபேறுகளையும் நாம் அடையும் மாதம் வைகாசியேயாகும். வசந்த ருது சித்திரையில் ஆரம்பிக்கும்போதே மரங்கள் தளிர்விட்டுத் தளைக்கின்றன. பின்னர் மொட்டுக் கட்ட ஆரம்பிக்கின்றன. மொட்டுக்கள் அழகான மலர்களாகவும் நறுமணங்கொண்ட மலர்களாகவும் மலர்கின்றன. நன்கு பருவமடைந்த பூக்களில் காய் வரும். அவை பின்பு தீஞ் சுவைக் கனியாக மாறும் பூ, காய், பழம் என்பனவற்றையெல்லாம் நாம் தேவ காரியங்களுக்கும் நமது உணவுக்கும் எடுக்கின்றோம். வைகாசியில் அக்கினி நாள் முடிவுறும். முருகப்பெருமான் அவதரித்தது வைகாசி விசாகத்திலேயாம். ஆகவே வசந்தத்தில் வரும் வைகாசி ஒரு சிறப்பான மாதம் ஆகும்.

## வசந்த காலம்

நாம் ஏலவே குறிப்பிட்டவாறு வசந்தத்தின் முதிர்ச்சியை வைகாசியிலேயே காணமுடியும். இக்காலத்தில் இடம்பெறும் அபிஷேகம், உற்சவம் ஆகியவற்றில் பூ, காய், கனிவகைகள் பெரிதும் உபயோகப் படுத்தப்படுகின்றன. அத்தோடு இக்காலத்திலே கிடைக்கும் காய்கள், பழம் என்பன போஷாக்குச் சத்து உள்ளதாகவும் சுவையானதாகவும் உள்ளதால் நாம் கூட இவைகளை மகிழ்ச்சியுடன் உண்ண முடிகின்றது.

## அக்கினி நாள்

காண்டாவனம் என அழைக்கப்படும் அக்கினி நாள் சித்திரையில் ஆரம்பமாகி வைகாசியில் முடிவுறும். நாம் ஏலவே குறிப்பிட்டவாறு பூஜை, வழிபாடுகள் நிகழும் வேளையில் எல்லோரும் சிவதர்சனஞ் செய்தல் நல்லது.

வைகாசியில் சூரிய வெப்பம் அதிகம். ஆகவே இக்காலத்தில் உடுக்க உடுப்புக்களையும், பாதணி, குடை, விசிறி, ஜல பாத்திரம் என்பனவற்றையும் தானமாகக் கொடுப்பதும் நம்மிடையே உள்ள வழக்கம் ஆகும்.

தாகம் அதிகமாக இருக்கும் இக் காலத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்து நீர்மோர், பானக்கம் என்பன கொடுக்கப்படும் தற்காலத்

தில் குளிரூட்டப்பட்ட பழச்சாறு சகலருக்கும் விநியோகிக்கப்படுவதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

மக்கள் மட்டுமல்லாது பசு, காளை, ஆடு முதலானவை கூட சூரிய வெப்பத்தால் இக்காலத்தில் தவிக்கும். ஆகவே கோவில் வாசல், வீட்டு வாசல் போன்ற இடங்களில் நீர்த்தொட்டி கட்டி அதிலே நீரை நிரப்பி வைப்பர். அதற்கு அண்மித்தாக ஓர் ஆவுரிஞ்சிக் கல் நட்டு வைக்கப்படும். களைப்புற்றுத் தாகத்துடன் வரும் மந்தை இனம் தண்ணீர்த் தொட்டியில் நீர் அருந்தி, ஆவுரிஞ்சிக் கல்லில் தனது உடம்பைத் தேய்த்துக் களைப்பாறும். இவ்வரிய புண்ணிய செயலினை நம்முன்னோரே ஆரம்பித்து வைத்துச் செயற்படுத்தியமை யால் இன்றும் இஃது வழமையில் இருந்து வருகின்றது.

அக்கினி நாட்களில் கடும் வெய்யில் காரணமாக அம்பாள் நோய், சூடு சம்பந்தமான வியாதிகள் மக்களிடையே பரவலாகக் காணப்படும். அவ்வாறு பீடிக்கப்பட்டவர்களிற் சிலர் ஒதுக்குப்புறமான அம்பாள் ஆலயங்களில் தங்கித் தமது நோய் குணமானதும் வீடு செல்வர். திருகோணமலை பாலம் போட்ட பத்தினித் தெய்வ ஆலயத்தில் இப்படியாக நோய்வாய்ப்பட்ட பக்தர்கள் தங்குவது வழக்கம். காளி, மாரி, துர்க்கை முதலான தெய்வங்களின் அநுக்கிரகத்தை வேண்டிப் பலரும் விஷேச பூஜை வழிபாடுகளைச் செய்வது மரபு. நேர்த்திக்கடனை நிறைவேற்றப் பலரும் சர்க்கரைச்சாதம், தயிர்ச் சாதம், நீர்மோர், பானக்கம், செவ்விழநீர், பழவகை முதலான வற்றை அம்பாளுக்கு நைவேதனஞ் செய்து பின்பு அதனைப் பக்தர் களுக்கு விநியோகிப்பர். வெப்பநோய்க்கான வழிபாடுகள் திருகோண மலை பத்திரகாளி கோவில், கொட்டாஞ்சேனை மாரி அம்மன், யாழ். வீரமஹாகாளி, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் முதலான அம்பாள் ஆலயங்களில் பக்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனி நாம் நீர் மோர் செய்யும் விதத்தைப் பார்ப்போம். ஒரு குவளை தயிர், சிறிதளவு உப்பு இவை இரண்டையும் நன்றாகக் கடைய வேண்டும். 1 துண்டு இஞ்சியை நசுக்கிக் கடைந்த மோருடன் சேர்க்க. சிறுதுண்டு பெருங்காயம், ஒரு தேக்கரண்டி கடுகு இவைகளைத் தாளிதஞ் செய்து மோருட் போட்டு நன்றாகக் கலக்கியபின் நைவேதனத்துக்கு எடுக்கலாம்.

அடுத்து பானக்கம் எப்படிச் செய்வதென்பதை நோக்குவோம். சர்க்கரையைப் பொடித்துத் தண்ணீருடன் கலக்கவேண்டும். 2 – 3 ஏலக்காய், சுக்கு ஒரு துண்டு இவைகளைப் பொடித்து நீருடன் சேர்க்க. ஒரு எலுமிச்சம் பழச்சாற்றையும் பிழிந்து மேற்கூறிய சர்க்கரைத் தண்ணீருடன் கலந்து பின்பு நைவேதிக்க எடுக்கலாம்.

## வைகாசிப் பொங்கல்

தைப்பொங்கலுடன் ஆரம்பமாகும் பொங்கல் பங்குனித்திங்கட் பொங்கல் சித்திரை வருடப்பிறப்புப் பொங்கல் என விரிவடைந்து வைகாசிப் பொங்கல் என மலருகின்றது. குறிப்பாக வைகாசித் திங்களிலும், வெள்ளியிலும், விசாகம், பூரணை தினத்திலும் வைகாசிப் பொங்கல் விமர்சையாக இடம் பெறுவது குறிப்பிட வேண்டியதொன்று. வைகாசிப் பொங்கல் என்றதும் இலங்கையிலே வற்றாப்பளை அம்பாள் ஆயல வருடாந்த வைகாசிப் பொங்கல் மிக முதன்மை வாய்ந்தது. இங்கு கடல் நீரைக் கொண்டுவந்து ஆலய விளக்கை ஏற்றி அற்புதமான கண்ணகி அம்பாளுக்குப் பொங்கல் செய்யப்படுகிறது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அடியார் கூட்டம் இவ்வாலய வருடாந்தப் பொங்கலில் பங்கு கொள்கின்றதென்றால் மூர்த்திகரத்தை நாம் எப்படி வர்ணிப்பது? அருட்கடாக்ஷம் கொண்ட கண்ணகி அம்பாள் அங்கு கொலு வீற்றிருந்து அடியாரின் இன்னல் இடரினைப் போக்குகிறாள்.

வைகாசியில் திருகோணமலை பாலம் போட்ட பத்தினித் தெய்வம், சுட்டிபுரம் முத்துமாரி ஆகிய ஆலயப் பொங்கலும் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை. மட்டக்களப்புப் பகுதியில் எல்லாக் கண்ணகி அம்பாள் ஆலயங்களிலும் சிறப்பான பொங்கல் வழிபாடுகள் உள. யாழ். நாச்சிமார் கோவில், மாதனை கண்ணகை, புதூர் நாகதம்பிரான் போன்ற ஆலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் வைகாசிப் பொங்கல் சிறப்புற இடம்பெற்று வருகின்றது.

## குளிர்த்தி

வருடாந்தக் குளிர்த்தி, சடங்கு என்பன வைகாசி மாதத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஆலயங்களில் இடம் பெறுவதுண்டு. அதுதவிர ஊரிலே அம்மாள் நோய் காணப்படின் குளிர்த்தி நடைபெற்று வருகின்றது.

முழு ஊருமே சேர்ந்து பெருவாரியாகச் சோறு, கறி, குழம்பு என்பவற்றைச் சமைத்து மலைபோலப் படையல் செய்து நைவேதிப்பது குளிர்த்தி எனப்படும்.

## வைகாசி விசாகம்

ஸ்ரீ முருகப் பெருமான் உலகில் உள்ளோரை உய்விக்க வைகாசி விசாக நட்சத்திரத்தில் தோன்றினார். முருக அவதாரத்தால் சூரன் மாண்டான். உலகில் உள்ளோர் ஆணவம், கன்மம், மாயை என்ற

மும்மலங்களினின்றும் விடுபட்டுக் கடவுட் சிந்தனையுடன் இருக்க வேண்டும் என முருகப்பெருமான் எமக்கு அறிவுறுத்திய வண்ணம் உள்ளார்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி என்று புகழ்ந்து பாமாலை சூடப்பட்ட முருகப் பெருமான் ஆறு முகங்களுடன் ஸ்ரீ சண்முகர் என்ற சிறப்புப் பெயரோடு ஆலயங்களில் எழுந்தருளி இருப்பதை நாம் தர்சிக்கலாம்.

பஞ்சபூதங்களும் உயிரும் சேர்ந்து ஆறு முகங்களாகின. உயிர்கள் யாவும் இன்னல் இடரின்றித் தன் நிலை வந்தடைய வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை ஆறுமுகப் பெருமான் எமக்குக் கூறியவண்ணம் உள்ளார்.

அரக்கர்களின் கொடுமையால் அல்லற்பட்டு அவஸ்த்தைப்பட்ட தேவர்கள் சிவபெருமானிடம் சென்று சூரபத்மன் முதலான அரக்கர்களினின்றும் தம்மை விடுவிக்க விண்ணப்பஞ் செய்தனர், சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் உண்டாகி அவை சரவணப் பொய்கையுள் விழுந்துகுளிர்ச்சியடைந்து ஆறு அழகிய திருக்குழந்தைகளாக வடிவெடுத்தன. ஆறுமுக அவதாரம் வைகாசி விசாகத்தில் நிகழ்ந்ததால் வைசாசி விசாகம் முருகனுக்கான திருநாளா யிற்று. முருகன் அவதாரத்தை

''அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய''

எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்திலும், ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ கதிரேசன் தெரு, கொம்பனித் தெரு, தட்டாரத்தெரு செட்டித் தெரு, கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி, நீர்வேலி, மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய இடங்களிலும் உள்ள முருகன் ஆலயங்களில் வைகாசி விசாகத் திருவிழா மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வைகாசி விசாகத்தன்று யம தர்மராஜாவைத் திருப்திப்படுத்தவும் வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

## வைகாசிப் பௌர்ணமி

அம்பாள் ஆலயங்களில் அபிஷேகம், பூஜை, ஸ்ரீ சக்ரபூஜை, பொங்கல், குளிர்த்தி என்பன பக்தி பூர்வமாக நிகழும் வைகாசிப்

பௌர்ணமியன்று சந்திரன் தண்ணொளி வீசி அருமையாகக் காட்சி அளிப்பதை நாம் அவதானிக்க முடியும். அன்னை இல்லாதோர் பௌர்ணமி விரதம் அநுஷ்டிக்க வேண்டும். ஏனைய மாதங்களைப் போல வைகாசி அமாவாசையன்று தகப்பன் இல்லாதோர் விரத அநுஷ்டானங்களுடன் பிதுர்க்கடனை நிறைவேற்றல் நன்று.

வைகாசிமாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி வருதி நீ என்பதாகும். நம்மைக் காத்துக்கொள்ள இவ்விரதம் மேலான தென்பர். இம் மாதத்தில் வரும் சுக்ல பக்ஷ ஏகாதசி மோஹினீ என்றழைக்கப்படும். மோகம் அகன்று நல்வாழ்வு வாழ இவ்விரதம் சிறப்பானது. ஆகவே ஏகாதசி அன்று மகாவிஷ்ணு விரதத்தையும், பிரதோஷத்தன்று பிரதோஷ விரதத்தையும், சோமவாரத்தன்று சிவனையும், சதுர்த்தியில் விநாயகரையும், சஷ்டி, கார்த்திகை நாட்களில் முருகனையும் விரத அனுஷ்டானங்களுடன் வழிபடல் உத்தமம்.

வைகாசி மாதம் சிவ, சக்தி, முருகன் அம்சங் கொண்ட மாதம் ஆகும். இம்மாதத்தில் சூரியன் உஷ்ணத்தைத் தர சந்திரன் தண்ணொளி வீசுகிறார். மனித வாழ்வு இன்ப, துன்பங்களுக்கு மத்தியில் உள்ளது என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. எமது வழிபாடுகளை முறைப்படி செய்து நல்வாழ்வு வாழ்வோமாக!

•

சமுத்திர அலைகளை எத்தனை நேரம் வேண்டுமானாலும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அலுப்பே இருக்காது அதே போல ஹிந்து சமயத்திற்கு ஆதாரமான ராமாயணம், மஹா பாரதம் போன்ற நூல்களை எத்தனை தடவைகள் படித்தாலும் அவைகளை மேன்மேலும் படிக்கவே தூண்டும்.

சமுத்திரத்திலே முத்து, திமிங்கிலம், மீன், அலை என்பன உள. அதேபோல ஹிந்து சமயத்திலும் பல கலாசாரங்களும் தத்துவங்களும் உள்ளன. அவைகளை நம்புகிறவர்கள் பேரானந்தம் அடைகின்றார்கள்.

— ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்
காஞ்சி காமகோடி பீடம்.



705035

University of Peradeniya
20 DEC 2021

# ஆடலரசனுக்கு ஆனித் திருமஞ்சனம்

ஆனி மாத விசேஷங்களை நாம் நோக்குவோம். ஆனி உத்திரம் மிகவும் விசேஷமானது. ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேக நாட்களுள் ஆனி உத்திரமும் ஒன்றாக விளங்குவதால் ஆனி உத்திரம் மகத்தானதாக உள்ளது.

கோவில்களில் ஆறு காலப் பூஜைகள் நடைபெறுவதை நாம் அறிவோம். அதேபோன்று ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேகங்களும் ஆறு ஆகும் கோவில்களில் நடைபெறும் பூஜா காலத்திற்கேற்ப நடேசர் அபிஷேகங்களும் உள. மார்கழி மாத ஆருத்திரா தர்சனத்தை நோக்கின் இது வைகறை வழிபாடாக அமைகின்றது. மாசி மாத பூர்வ பக்ஷ சதுர்த்திசியில் வரும் அபிஷேகம் மத்தியான அபிஷேகமாக உள்ளது. சித்திரை மாதத்துத் திருவோண நட்சத்திர அபிஷேகம் உச்சிக்கால வழிபாடாக அமைவதை நோக்கலாம். இந்நோக்கில் ஆனி மாதத்து உத்திர நட்சத்திரத்தில் வரும் ஸ்ரீ நடராஜர் அபிஷேகமானது திருமஞ்சனத் திருநாளாக அமைந்து மாலை வழிபாட்டு நாளாக மிளிர்கின்றது. ஆவணி மாதத்து பூர்வ பக்ஷ சதுர்த்தசி அபிஷேகமானது இரவு வழிபாடாகவும் புரட்டாதி மாத பூர்வபக்ஷ சதுர்த்தசி அபிஷேகம் அர்த்த ஜாம வழிபாடாகவும் உள்ளது. இந்த அபிஷேகங்கள் ஒவ்வொரு கோவில் வழமைக்கும் அமைய நடைபெற்று வருவதை நாம் கவனத்திற் கொள்ளல் நன்று. ஆறு காலப் பூஜைகள் எவ்வகையில் சிவாகம முறைகளுக்கு அமைய குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறவேண்டுமோ அதே போன்றே ஸ்ரீ நடராஜரின் அபிஷேக தர்சனமும் மிக மிக முக்கியம் வாய்ந்ததாகும். ஸ்ரீ நடராஜர் தர்சனம் கோடி புண்ணியத்தைத் தரவல்லது.

உலகில் சகல ஜீவராசிகளும் ஸ்ரீ நடராஜப் பெருமானால் அனுக்கிரகிக்கப்படுகின்றன. அவரின் திருநடனமே உலகை இயக்குகின்றது. அவரின் ஆனந்த தாண்டவ நடனத்தால் பஞ்ச கிருத்தியங்களும் நிகழ்கின்றன.

ஆனி உத்திர மகிமையைப் பேசும் நாம் ஸ்ரீ நடராஜ அமைப்பைப் பற்றியும் அறிவது சாலப் பொருத்தம் அல்லவா?

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீறும்



205035 29 DEC 2021

இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண் டுவ தேயிந்த
மானிலத்தே.

எனத் திருநாவுக்கரசுநாயனார் ஸ்ரீ நடராஜப் பெருமானை விதந் துரைக்கின்றார்.

ஆம்! ஸ்ரீ நடராஜரின் பவளம்போலான மேனியில் துலங்குவது பால் வெண்மைக் கொப்பான தூய வெண்ணீறு ஆகும். எல்லா உலகுக்கும் நானே தலைவன் என்ற பெருமிதத்துடனான குமிழ்ஞ்சிரிப்பு கொவ் வைப் பழ நிறமான செவ்வாயில் காணப்படுகின்றது. வலது கையில் உடுக்கை உள்ளது. இது தோற்றமாகிய படைத்தற்றொழிலைக் கூறிக் கொண்டு உள்ளது. அபய முத்திரையானது அஞ்சேல் எனக் கூறிய வண்ணம் காத்தற்றொழிலைச் செய்கின்றது. திருக்கரத்தில் உள்ள தீச்சுடரானது பஞ்சபூதங்களினாலும் மும்மலங்களினாலும் எழும் தீய சக்திகளைப் பொசுக்கிச் சாம்பல் ஆக்கும் அழித்தற்றொழிலைச் செய்கின்றது. ஊன்றிய திருவடியானது மறைத்தற்றொழிலைக் காட்டுகின்றது. தூக்கிய திருவடியானது அருளற்றொழிலை எடுத்தியம்புகின்றது. அங்கே அவரது திருமேனியில் பஞ்சாட்சரம் நமசிவாய காணப்படுகிறது. ஓம் எனும் ஓங்காரப் பிரணவம் திருவாசியாக உள்ளது. திருவாசியின் தீச்சுடர்கள் தீயவைகளை அழிக்கும் தத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

ஸ்ரீ நடராஜர் திருவுருவத்தை மேலும் நோக்கின் அங்கே தத்துவக் கருத்துக்கள் பொதித்துள்ளமையைக் காணலாம், சாந்தமும், மலர்ச்சியும் தவழும் முகமானது பெருங்கருணைப் பேரானைக்கே உரியது என்கிறது. ஞானச் சிறப்பையும் தவ ஒழுக்கச் சிறப்பையும் ஜடாமுடியில் காணலாம். பேராற்றல் படைத்தவர் என்பதற்கு இலக் கணமாக கங்கை அவரின் திருமுடியிலே உள்ளது, அஞ்சேல் என அபயமளித்துத் தம்மைச் சரண் அடைந்தவர்களை அரவணைக்கும் பெரும் பண்பினைத் திருமுடியில் இருக்கும் இளம்பிறைச் சந்திரன் உணர்த்திக் கொண்டிருக்கின்றது. ஆன்மாக்களின் கர்ம வினைகள் தவறுகள், குற்றங்களைத் தமது உள்ளத்தினால் களைந்து அவற்றை இல்லாமற் செய்யும் பேராற்றலை நீலகண்டம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆலயங்களில் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பிகையோடு தெற்கு நோக்கி வீற்றிருப்பதை நாம் காணலாம். யமன் தென்திசைக்கு அதிபதி அல்லவா? ஆகவே தம்மை வந்தடையும் அடியாரின் யமபயத்தை நீக்கும் தத்துவத்தை தென்முகக் கடவுளான ஸ்ரீ நடராஜர் கூறிக்கொண்டு வீற்றிருக்கின்றார்.

சப்த விடங்கற் தலங்களில் ஸ்ரீ நடராஜப்பெருமானின் நடனங்கள் நிகழ்கின்றன. திருவாரூரில் உள்ள நடராஜர் முகூர்த்தம் வீதிவிடங்கர் ஆகும். அங்கே சுவாசம் விடுவது போன்ற சுவாச ரூபமான நடனம் நிகழ்கின்றது. இஃது அஜபா நடனம் எனப்படும். திருநள்ளாற்றில் உள்ள முகூர்த்தம் நாக விடங்கர் ஆகும். இது சிடு சிடு என ஆடும் நடனம். இதனை உன்மத்த நடனம் என்பர். நாகைப்பட்டினத்தில் உள்ள நடராஜர் சுந்தர விடங்கர் என அழைக்கப்படுகின்றார் சமுத்திர அலைகள் ஆடி அசைந்து மோதி மோதி அடிப்பது போன்ற நடனம் இவ்வாலயத்தில் நிகழ்கின்றது. இதனைப் பாரா வார தரங்க நடனம் எனக் கூறுவர். திருக்காறாயிலில் உள்ள பெருமான் ஆதி விடங்கர் என்பவராகும். தத்தித் தத்தித் திரியும் கோழியைப் போல ஆடும் நடனம் இங்கு நிகழ்கின்றது. இது குக்குட நடனம் என்பதாம். திருக்கோழிலியில் உள்ள நடராஜர் அவனிவிடங்கர் என அழைக்கப்படுகின்றார். இங்கே ரீங்காரம் செய்து சுற்றித்திரியும் வண்டினையொத்த திருநடனம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. இது பிருங்க நடனம் என வர்ணிக்கப்படுகின்றது. திருவாய்மூர் என்ற திருத்தலத்திலே நீல விடங்கர் வீற்றிருந்து திருநடனஞ் செய்கின்றார். அழகிய தாமரைப்பூ அலைகளுக்கேற்ப அசைந்து அசைந்து ஆடுவது போன்ற நடனம் இவ்வாலயத்தில் ஸ்ரீ நடராஜரால் ஆடப்படுகின்றது. இந்த நடனம் கமல நடனம் ஆகும். புவனிவிடங்கர் வேதாரணியத்தில் எழுந்தருளி உள்ளார். வெள்ளைவெளேரென உள்ள அழகிய அன்னம் சஞ்சரிப்பது போன்ற நடனத்தை அவர் இங்கு ஆடுகின்றார். இதனை ஹம்சபத நடனம் என நடனக் கலை கூறுகின்றது. இவைகள் சப்த விடங்கற் தலங்களில் உள்ள நடனக்கலை முகூர்த்தங்களாம்.

சபானாயகர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர் ஸ்ரீ நடராஜர். பஞ்ச சபைகளில் இவரின் நடனங்கள் சிறப்பானவை.

ஸ்ரீ நடராஜர் மதுரை மாநகரில் திருத்தலத்தில் இடது காலை ஊன்றி,வலது காலைத் தூக்கித் திருநடனஞ் செய்கின்றார். திருவாலங்காட்டில் இடது காலைத்தூக்கி ஆடும் முகூர்த்தத்தை நாம் காண முடியும். இவைகள் ஸ்ரீ நடராஜர் கால் மாறி ஆடும் திருத்தலங்களாம்.

ஆனி மாத மகோற்சவம் சிதம்பர ஷேத்திரத்தில் கோலாகலமாக நிகழ்கின்றது. இங்கே மூல மூர்த்தியாக ஸ்ரீ நடராஜப்பெருமான் விளங்குகின்றார். இம்மகோற்சவத்திலே நிகழும் பஞ்சரத உற்சவம் பார்ப்பவர்களையே பரவச மூட்டும். அவ்வாலயச் சிவாச்சாரியர்கள் தீக்ஷதர் என்ற சிறப்புப் பெயரோடு விளங்குகின்றார்கள். அவர்கள்

சிதம்பர நடராஜருக்கே அடிமைபூண்டு சிவத்தொண்டு புரியும் சிவ சீலர்களாகும். இதனாலேயே

''தில்லை வாழ் அந்தணர்கள் தம்
அடியார்க்கும் அடியேன்''

என விதந்துரைக்கப்பட்டுள்ளது.

அப்படியான மகோன்னத தீக்ஷதர்கள் தேரைச் சூழ்ந்தும் வடம் பிடித்து ஆனி மாத இரதோற்சவ தினத்தில் வேதகோஷஞ் செய்வர். பறை முழங்கும். பக்தர் கூட்டம் அரோகரா எனக் கோஷிக்கும். இவைகளுக்கு மத்தியில் பஞ்ச கிருத்தியத்தின் நாயகனான ஸ்ரீ நடராஜப் பெருமான் கொவ்வைச் செவ்வாயில் குழிஞ்சிரிப்புடன் எம் அனை வரையும் அனுக்கிரகிக்க எழுந்தருளுகின்றார். இவ்வரிய காட்சியை நாம் சிதம்பர க்ஷேத்திரத்திலேயே காணமுடியும்.

ஆனித் திருமஞ்சனத்தினமான ஆனி உத்திரத் திருநாளில் ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருமஞ்சனத் தீர்த்தம் வெகு சிறப்பாக ஆயிரங்கால் மண்டபத்தில் நிகழ்ந்து வருகின்றது. அங்கே பஞ்ச கிருத்தியத் தொழிலைப் புரியும் ஸ்ரீ நடராஜரைப் பார்த்தபடி பெண்மைக்கே உரித்தான குனிந்த தலையுடன் எல்லா உலகமும் ஆனாய் நீயே எனச் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாள் கூறியவண்ணம் கொலு வீற்றிருக்கின்றார்.

ஸ்ரீ நடராஜரையும் ஸ்ரீ சிவகாமசௌந்திரி அம்பிகையையும் குறிப்பாக எல்லாச் சிவாலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் தரிசிக்கலாம். இங்கே ஆனி உத்திரத் திருமஞ்சனத் தீர்த்தம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எண்ணைக்காப்பு அபிஷேகம் முதல் எல்லா அபிஷேகங்களும் வேத மந்திர கோஷத்துடன் மங்கல வாத்தியம் முழங்க நிகழ்ந்து வருகின்றது.

இலங்கையில் திருக்கேதீஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம், நகுலேஸ்வரம் வண்ணார்பண்ணைச் சிவன், வல்வெட்டித்துறைச்சிவன், திருக்கோணேஸ்வரம், பொன்னம்பலவாணேஸ்வரம், அருணாசலேஸ்வரம், முனேஸ்வரம், காலிச் சிவன், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் முதலான க்ஷேத்திரங்களில் ஆனி உத்திர விழா வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஏனைய ஆலயங்களிலும் ஆனி உத்திர திருவிழா சிறப்பாக நடைபெற்று வருவதை நாம் இங்கு குறிப்பிடல் வேண்டும்.

ஸ்ரீ நடராஜப் பெருமானையும் அவ்ரின் திருநடனத்தையும் அது நடைபெறும் தில்லை அம்பலத்தையும் திருப்பல்லாண்டு இவ்வாறு கூறுகின்றது.

''மன்னிய தில்லைதன்னுள் ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற திருச்சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நடனம் பயில வல்லவன்'' எனப்புகழ்ந்துரைக்கின்றது.

அதேபோன்று

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

எனத் திருப்புராணம் எடுத்துரைக்கின்றது. அதாவது அம்பலத்தில் ஆடும் ஸ்ரீ நடராஜர், விதந்துரைப்பதற்கு அப்பாற்பட்டவர் பெருந்சோதி வடிவின்ர் என்றெல்லாம் கூறி அப்படியான மகோன்னத மூர்த்தியின் தாமரை மலர்களையொத்த பாதாரவிந்தங்களை வாழ்த்தி வணங்குதல் வேண்டும் என்பதாம். ஆகவே ஆனித் திருமஞ்சனத்தினமான ஆனி உத்திரதினத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானை விரத அனுஷ்டானங்களுடன் நாம் வழிபடல் மிக நன்று. இவ்வழிபாடு சகல சௌபாக்கியங்களையும் தரவல்லது-

ஆனிப் பௌர்ணமியன்று அம்பாளுக்கு விசேஷ அபிஷேகம், பூஜை, ஸ்ரீ சக்ர பூசை, உற்சவம் என்பன நன்கு நடைபெறுகின்றன. இந்நாளில் தாய்க்காகத் தாயை இழந்தவர்கள் விரதங்களை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று ஆனி மாத அமாவாசை தினத்தில் பிதுர்தர்ப்பணம், பிதுர் வழிபாடுகளைத் தகப்பனை இழந்தவர்கள் செய்யவேண்டும்.

ஆனி மாதச் சதுர்த்தியன்று விரதமிருந்து பிள்ளையாரை வழிபட வேண்டும். பிரதோஷத்தன்று விரத அநுஷ்டானங்களுடன் சிவாலய தரிசனத்தைச் செய்ய வேண்டும். சஷ்டி, கார்த்திகைத் தினங்களில் முருகனுக்கு விரதம் இருந்து வழிபடல் சாலச் சிறந்தது. சோம வாரத்தில் சோமவார விரதம் மேற்கொள்ளல் நல்லது. ஆனி மாதக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி அபரா ஆகும். அதேபோல சுக்ல பக்ஷ ஏகாதசி நிர்ஜலா எனப்படும். ஆகவே இவ்விரு ஏகாதசி தினங்களில் மஹா விஷ்ணு விரத வழிபாடுமேலானது.

ஆனிமாத விசேஷங்களை இதுகாறும் நோக்கினோம். இஃது ஆனந்தக் கூத்தனின் மாதங்களுள் சிறப்பான ஒருமாதமாக உள்ளமையையும் கண்ணுற்றோம். எனவே விரத அநுஷ்டானங்களுடன் ஆனிமாத விசேஷ தினங்களைப் பக்தி பூர்வமாக வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக!

# பக்தியுங் குதூகலமுங் கொண்ட ஆடி

ஆடிமாதம் பிறக்கும் நாளில் சூரிய பகவான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்கின்றார். இது தக்ஷிணாயன புண்ணிய காலம் எனப்படும். இதனையொட்டிக் கோவில்களில் வழமை போல மாதச் சங்கிராந்தித் தீர்த்தம் இடம் பெறுகின்றது. ஆடிப்பூர விழா அம்பாளுக்கும், ஆடி அமாவாசை வழிபாடு பிதுர்களுக்கும் ஆக ஆடி மாதத்தில் கூறப்பட்டுள்ளன. ஆகவே தேவ விசேஷமும், பிதுர் விசேஷமும் கொண்ட மாதமாக ஆடி மாதம் உள்ளது.

## ஆடிப்பிறப்பு

சூரியன் தெற்கில் இருந்து வடக்கிற்கு நகரும் உத்தராயண புண்ணிய தினத்தில் நாம் பொங்கல் பொங்கி மகிழ்ச்சியுடன் இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றோம். இதனைப்போல ஆடி மாதப் பிறப்பன்று கூழ் ஆக்கிக் கொழுக்கட்டை அவித்து வழிபாடுகள் செய்தபின் குதூகலமாகக் கூழைக் குடித்துக் கொழுக்கட்டையை உண்ணுகின்றோம்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் இந்நிகழ்ச்சியை மிகவும் தத்ரூபமாக இப்படி வர்ணிக்கின்றார்.

''ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே''

எமது இலங்கையில் ஆரம்பக் கல்வி திண்ணைப் பள்ளிக்கூடமாக இருந்த காலத்தில் ஆடிப்பிறப்பும் விடுதலை நாளாக இருந்தது. ஆகவே மாணவர் போஷாக்குச் சத்துள்ள உணவை உண்ண இப்படியான பாட்டைப் பாடி உண்டு மகிழ்ந்தனர் என்பதிற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு. பாடசாலைகளில் போஷாக்குச் சத்துள்ள உணவுகளைக் கொடுக்கும் இவ்வேளை கூழும் கொழுக்கட்டையும் கொடுக்க நமது முன்னோரே வழிகாட்டியுள்ளமையை நாம் கவனத்திற் கொள்ளல் நன்று.

ஆடிக்கூழ், கொழுக்கட்டை என்ற பிரபலமான உணவினை நாம் தேக ஆரோக்கிய முறையில் நோக்கலாம் தை முதல் ஆனிவரை வெப்ப காலம். ஆடி முதல் மார்கழிவரை குளிர்காலம். வெப்ப

காலத்தில் எமது தேகத்தில் கெட்ட நீர், கபம், பித்தம் போன்றவை சேர்ந்திருக்க இடம் உண்டு. இவை மாரியில் நோய் நொடிக்கு ஏதுவாக இருப்பவை, ஆகவே இதனை நீக்கவே ஆடிக்கூழ் பிரபல்ய மடைந்தது. பனங்கட்டி, அரிசிமா, பயறு என்பன கொண்டு ஆக்கப் பட்டதே கூழ் ஆகும். இதனை இளஞ் சூட்டுடன் பருகுதல் வேண்டும். கூழினைக் குடிக்கும்போதே வியர்வை மூலம் கெட்ட நீர்கள் தானாகவே அகலுகின்றன. இத்தோடு மலச்சிக்கலையும் இல்லாமற் செய்யும் சக்தி கூழுக்குண்டு. இந்நோக்கில் ஆடிக் கூழ் தேக சுகத்தைத்தரவல்லது என்பதைக் கண்ணுற்றோம்.

அரிசிமா, பயத்தம் பருப்பு, தேங்காய்த்துருவல், சர்க்கரை என்பன கொண்டு தயாரிக்கப்படுவது கொழுக்கட்டையாகும்; ஆவியால் அவிக்கப்படும் கொழுக்கட்டை வயிற்றுக்குச் சிறந்த ஆகாரமாக அமைகின்றது. விதம் விதம் ஆன கொழுக்கட்டைகள் தயாரிக்கப்படுவதால் பிள்ளைகள் இதனை விருப்புடன் உண்ணும் ஒரு பண்டமாகி விட்டதெனலாம்.

கூழ், கொழுக்கட்டை என்பன நமது உணவு முறையில் இரவுக் கான உணவுகளாகக் கொள்ளப்பட்டு வந்தமை இங்கு குறிப்பிடல் சாலப் பொருந்தும்.

## ஆடிச் செவ்வாய்

ஆடி மாதப் பிறப்பை அடுத்து நாம் நோக்குவது ஆடிச் செவ்வாயையேயாம். ''ஆடிச் செவ்வாயைத் தேடிப் பிடி'' என்பது முதுமொழி. ஆம், உதயத்திலே செவ்வாய், ஏழில் செவ்வாய், எட்டில் செவ்வாய் ஆகிய செவ்வாய் தோஷம் உள்ளவர்களும் ஏனை யோரும் செய்வாய் கிழமை விரதத்தை ஆடிச் செவ்வாயிற்றொடங்கி விரதமிருத்தல் வேண்டும். செவ்வாய்குச் சுப்பிரமணியர் அதிபர். அத்தோடு அம்பாள், சுப்பிரமணியர், வைரவர் முதலான மூர்த்திக ளின் அருளுக்கும் ஆடிச் செய்வாய் விரதம் முதன்மையானது. இவ் விரதத்தை ஆடிச் செவ்வாயன்று கோவிலில் சங்கற்பஞ்செய்து ஆரம்பித்தல் உத்தமம்.

## ஆடி அமாவாசை

நாம் இனி ஆடி அமாவாசையை நோக்குவோம். சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும்போது அமாவாசைத் திதி உண்டாகின்றது. ஞானகாரகன், ஆத்மகாரகன் சூரியன் ஆகும். ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் என்பனவெல்லாம் சூரியனாலேயே தோன்றுகின்றன. மனத்திற்கு

அதிபதி சந்திரன் ஆவான். மகிழ்ச்சி, நல்லறிவு, உற்சாகம், இன்பம் என்பன சந்திரனாற் தோன்றுவனவாகும். ஆகவே சூரியனும் சந்திரனும் உயிர்களின் சுபபோகங்களை தந்தவண்ணம் உள்ளார்கள். இவர்கள் ஒன்று சேரும் அமாவாசைத்தினம் ஒரு புனித நாள் ஆகும். சகல தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாவர். இந்நாளில் விரதம் இருத்தல் சாலச்சிறந்தது. அமாவாசைத்தினம் என ஏலவே குறிப் பிட்டிருந்தது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். ஆடிமாத அமாவாசை யானது பிதுர்க்கடனுக்கு முதன்மைவாய்ந்ததாக உள்ளது. வடக்கில் இருந்து தெற்கு நோக்கிச் சூரியன் நகர ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம் ஆகும். அதாவது சூரிய மண்டலத்துக்கு அப்பால் உள்ள பிதுர்லோகத்தை நோக்கி சூரியன் சஞ்சரிக்கும் காலம் பிதுர் தர்ப் பணத்துக்கு நன்னாள் ஆகும். இந்நாளில் பாபத்தைப் போக்கவல்ல சமுத்திர நீராடிச் சிரார்த்தம் எனப்படும் திவசம் செய்தல் உத்தமம். சமுத்திர நீராடு முன் இறந்த எமது மூதாதையர் மோஷம் அடைய வேண்டும் எனவும் நமது பரம்பரை வாழவேண்டும் எனவும் கூறிச் சங்கற்பித்துச் சமுத்திர நீராடல் வேண்டும். பின்பு சிரார்த்தம் செய்தல் வேண்டும். அல்லது எள்ளு, துளசி, நீர் என்பன கொண்டு பிதுர் தர்ப்பணஞ் செய்தும் பிதுர்களின் ஆசியைப் பெற்று வாழல் நன்று.

ஆடி அமாவாசையைப் பற்றிப் பேசும்போது காத்தவெட்டிக்காயே எல்லோர் மனதிலும் எழும். காத்தவெட்டிக் கொடி வருடத்தில் ஒரு முறை காய்ப்பதாகும். ஆடி மாதம் பிறக்கும்போது பூவாகவோ இளம் பிஞ்சாகவோ காணப்படும். காத்தவெட்டிக் கொடியில் ஆடி அமாவாசையன்றே முற்றிய சுவையுள்ள காத்த வெட்டிக் காய்களை நாம் பெற முடியும். இஃது ஆடி அமாவாசைக்கென்றே காய்ப்பது என்றே சொல்லவேண்டும். இது கசப்புச் சுவையானது. இதனை ஆடி அமாவாசையன்று சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் பொரித்து எல்லோரும் உணவோடு சாப்பிடுவது வழக்கம். நமது வயிற்றில் உண்டாகும் சிறு புழுக்களையெல்லாம் இல்லாமற் செய்யும் சக்தி வாய்ந்தது காத்தவெட்டிக்காய் ஆகும். நமது உணவின் அறுசுவை யுண்டியுள் ஒன்றாகக் காத்தவெட்டிக்காய் அமைந்து உள்ளமையை நாம் மறக்காமலிருக்க முடியாது. ஆடி அமாவாசைச் சமுத்திர ஸ்னானம் முதன்மை வாய்ந்தது இராமேஸ்வரப்பதியில் ஆனி மாதமே வந்து இடம் பிடித்துக் கொள்வர் வட இந்திய யாத்திரிகர்கள். அத்தோடு ஏனைய நாடுகளிலிருந்தும் அடியார் கூட்டம் ஆடி அமாவாசையன்று இராமேஸ்வரத்தில் குழுமும். சமுத்திர நீராடல், பிதுர் தர்ப்பணம், சிரார்த்தம் ஸ்ரீ இராமேஸ்வரசுவாமி, அம்பாள் தர்சனம் என்பன சிறப்பாக அங்கு இடம் பெறுகின்றன.

இலங்கையின் வடபால் உள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தீர்த்தோற்சவம் கீரிமலைக் கடலில் நடைபெற்றுவருகின்றது. அதேபோல கிழக்கிலங்கையில் மாமாங்கப்பதியில் உள்ளவாவியில் ஆடி அமாவாசைத் தீர்த்தம் கோலாகலமாக இடம் பெற்று வருவது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டியதாகும். புனித நீராடிப் பிதுர்க்கடன்களை நிறை வேற்றி இறையருளையும் பெற்று அடியார்கள் பல்லாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். விதியின்சதியால் இத்தீர்த்தங்கள் இப்போது மந்திர பூர்வமாக நடைபெறுகின்றன.

## கதிர்காம உற்சவம்

இலங்கையின் பிரசித்தி பெற்ற கதிர்காமப் பதியில் வீற்றிருக்கும் கதிர்காமக் கந்தனின் மஹோற்சவம் ஆடி மாதத்திலேயே இடம் பெறுகின்றது. இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் எண்ணிறைந்த பக்தர்கள் யாத்திரையாக இவ்வாலயத்துக்குச் செல்வது மரபு. வெளிநாட்டு அடியார் கூட்டம் கூட இங்கு இவ்வரிய தர்சனத்தைப் பெற வருவது சிறப்பம்சம் ஆகும். இதனையொட்டிக் கொழும்பு மாநகரில் சம்மாங்கோட்டார் ஆலயத்தில் ஆடிவேல் காவடி உற்சவமும், செட்டித் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் ஆடிவேல் விழாவும் சிறப்புற இடம் பெற்று வருகின்றது. ஜயந்திநகர் எனப்படும் ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்திலும் ஆடிவேல் விழா கோலாகலமாக நடைபெற்று வருவது ஈண்டு குறிப்பிடற்பாலது. ஆடி மாதத்துக் கிருத்திகை நட்சத்திரம் முருகனின் விரதநாள் ஆகும். இந்நாளில் முருகன் ஆலயங்களில் விசேஷ அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நடைபெறுவது வழக்கம். முருகன் அடியார்கள் விரத அநுஷ்ட்டானங்களுடன் முருகனை வழிபடும் நாள் இதுவாகும்.

## ஆடிப்பூரம்

ஆதி பராசக்தியான அம்பிகை ஆடிப்பூர நட்சத்திரத்தில் பக்குவம் அடைந்தாள் எனக் கூறப்படுகின்றது. இதனால் ஆடிப்பூரம் அம்பாளுக்கான நாள் ஆக அமைகின்றது. இந்நாளில் அம்பாளுக்கு அபிஷேகம், பூர்வகர்மச் சடங்கு, பூஜை, உற்சவம் என்பன வெகு விமர்சையாக இடம் பெற்று வருகின்றது. அம்பாள் ஆலயங்களில் ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்டு மஹோற்சவம், உற்சவம் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

அம்பாளின் எட்டுவகைச் சித்திகளையும் பெற இந்நாள் வழிபாடு உன்னதமானது. அப்பர் அடிகள் தமது தேவாரத்தில்.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்தே'' எனப் பாமாலை சூட்டி வழிபடுகின்றார். அஷ்ட சித்தி வழிபாட்டிற்கு ஆடிப்பூரமே சிறந்ததெனலாம். இதனாலேயே தேவி உபாசகர்கள் ஆடிப்பூரத்தன்று விசேஷ வழிபாடுகளைச் செய்து அம்பாளின் சக்திகளைப்பெறுகின்றார்கள்.

ஆடிப்பூர தினத்தன்று விரதம் இருத்தல், அல்லது உபவாசமிருத்தல், அம்பாளுக்கு அபிஷேகப் பொருட்களைக் கொடுத்தல் சிகப்பு அல்லது மஞ்சள் நிறச் சீலையை அணிவித்தல், அணிகலன்கள், மலர்மாலைகள் சாத்துதல், வில்வம் இலை, சாதிப் பந்திரிப்பூ, மல்லிகை, முல்லை, தாமரை மலர்களால் அர்ச்சித்தல் என்பன சிறந்தவை.

கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்த்தானத்தில் ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்டு அம்பாள் உற்சவம் நிகழ்ந்து வருகின்றது. தினமும் அபிஷேகம், பூஜை, ஸ்ரீ சக்ர பூஜை, திரிசதி அர்ச்சனை, திரிசதி ஹோமம் என்பன சிறப்புற நடைபெற்று வீதி உலாவும் நடைபெற்று வருகின்றது.

## நாக சதுர்த்தி

புத்திர பாக்கியத்துக்கான வழிபாடுகளில் நாக சதுர்த்தி வழிபாடும் மஹோன்னதமாகும். வளர்பிறையும், செவ்வாய்க்கிழமையும் கூடிய நன்னாளில் சதுர்த்தித் திதி வருமாயின் இது நாகசதுர்த்தி விரதநாள் எனப்படும்.

அனந்தன் என்னும் நாகமாகப் பகவான் பூமியைக் காத்தருளுகின்றார். தாய் சொல்லைக் கேட்காதபடியால் நெருப்பில் நாகரை அழியும்படி தாயே ஜபித்தாளாம், இதனால் பல சர்ப்பங்கள் எரிந்து அழியலாயின. அந்தச் சாபத்தை நிறுத்திய நாள் பஞ்சமி ஆகும். ஆகவே அவ்வேளையில் நாகங்களை வழிபட்டால் புத்திரப்பேறு கிட்டும். நாக சதுர்த்தியன்று நாகப் பிரதிஷ்டை செய்யும்படி சாஸ்த்திரத்தில் கூறப்பட்டுள்ளமையையும் நாம் கவனத்தில் இருத்திக் கொள்ளல் நன்று. நாகபாம்பினை அரைஞாணாக்கத் தரித்து இன்னல் இடரினைப் போக்குபவர் நமது பிள்ளையார். பிள்ளையார் வழிபாடு செய்து பின்பு நாக வழிபாட்டை மேற்கொண்டு பேரருளைப் பெற்று வாழ்தல் நன்று.

## ஆடிவிதை

''ஆடி விதை தேடி விதை'' என்பது ஒரு முதுமொழி. குல தெய்வ வழிபாட்டின் பின் விதைகளை ஆடி மாதத்தில் விதைக்க

வேண்டும் என இம்முதுமொழி எம்மை அறிவுறுத்துகின்றது. ஆடியில் விதைக்கும் பயிர்கள் நல்ல பலனைக் கொடுப்பன என்பதே இக்கூற்று ஆகும். எமது இந்து சமய வழிபாட்டிற்குத் தானியங்கள் இன்றியமையாதவை அல்லவா? ஆகவே ஆடியில் விதைகளை விதைத்தால் அவை எமக்கு நல்ல பலனைத்தரவல்லன.

ஆடி மாதப் பிரதோஷத்தில் பிரதோஷ கால வழிபாட்டையும், சோமவாரத்தில் சோம வார வழிபாட்டையும் பூரணை தினத்தில் அம்பாள் வழிபாட்டையும், கார்த்திகை சஷ்டித்தினங்களில் முருகன் விரதத்தையும், மேற்கொண்டு வழிபாடுகள் செய்தல் நன்று. ஆடிக் கிருஷ்ண ஏகாதசி யோகிநீ என்பதாம். இவ்விரதம் குஷ்டரோகத்தை நீக்க வல்லது. அதேபோல சுக்ல பக்ஷ ஏகாதசியானது சயிநீ ஆகும். இவ்விரத நாளில் தீப தான செய்வது சிறந்த தர்மம் ஆகும். மஹா விஷ்ணுவின் இவ்விரு ஏகாதசி தினங்களிலும் விரதம் இருந்து வழிபாடுசெய்வது நல்லது.

இதுவரை நாம் தெய்வ அருளுக்கும் பிதுர் ஆசிக்கும் உகந்த மாதமாக ஆடி மாதம் அமைந்துள்ளமையைக் கண்ணுற்றோம். ஆடி மாத விசேஷங்களை முறைப்படி அநுஷ்ட்டித்து நல்வாழ்வு வாழ்வோமாக!

## சுப மங்களவாழ்வை நல்கும் ஆவணி

தேவர்க டேவன் சிந்து முகத்தவன்
மூவர்கள் முதல்வன்முத் தொழிற்குங் காரணன்
மேவர மகிழ்வது விளம்பு நாமமுந்
தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்

ஆம்! இப்பாடல்கள் விநாயகப் பெருமானையும் அவர் அவதரித்த விநாயக சதுர்த்தியையும் எடுத்தியம்புகின்றது. இன்னல் இடரினைத் தவிர்த்துப் பேரின்ப வாழ்வைச் சதுர்த்தி வழிபாடு வலியுறுத்திக் கூறுகின்றது. ஆகவே விநாயகப் பெருமானின் விசேஷங்களை நாம் முதலிற் பார்ப்போம்.

தேவாதி தேவர்களுக்கும் பூவுலகிலுள்ளோர்க்கும் இன்னல் இடரினைக் கொடுத்து வந்த சிந்தூரனை அழிக்கும் பொருட்டு விநாயகப் பெருமான் திருஅவதாரஞ் செய்தார். ஆவணி மாத அமாவாசை வந்த நான்காம் நாள் சதுர்த்தியில் இவ்வவதாரம் நிகழ்ந்தது. எடுத்த கருமங்கள் இனிதே நிறைவுறவும், நடப்பவைகள் நன்றே நடக்கவும் நாம் பிள்ளையாரை வழிபட வேண்டும். வழிபடும் அவரிடரைக் களைந்து பேரருள் பாலிக்க பிள்ளையார் எந்நேரத்தி லும் வருவார் என்ற நம்பிக்கை எல்லோருக்குமுண்டு.

இதனைக் கந்தபுராணம் இவ்வாறு கூறுகின்றது:

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

ஆகவே பிள்ளையாரை ஆவணிச் சதுர்த்தியன்று விரத அனுஷ்டா னங்களுடன் வழிபட்டால் நம் எல்லோருக்கும் நல்வாழ்வு கிட்டும். ஆவணிச் சதுர்த்தியை யொட்டி விநாயகர் ஆலயங்களில் மஹோற்சவம், உற்சவம், சங்காபிஷேகம், லக்ஷார்ச்சனை விசேஷ அபிஷேகம் பூஜை, உற்சவம் என்பன நிகழ்ந்து வருகின்றன. கொட்டாஞ்சேனை கப்பித்தாவத்தை, பேலியகொட, வெள்ளவத்தை, முகத்துவாரம் கும்பளாவளை, நீர்வேலி மட்/ஆனைப்பத்தி பிள்ளையார் கோவில் களிலும் ஏனைய எல்லா ஆலயங்களிலும் விநாயக சதுர்த்தி சிறப்பாக இடம் பெறுகின்றது.

சதுர்த்தித்தினத்தில் அறுகு, வெள்ளறுகு என்பனவற்றாலான மாலை சாத்துதல் இவைகளால் அர்ச்சித்தல் மிக விசேஷமானது. கரும்பு, இளநீர், எள்ளுப்பாகு, தேன், அவல், மோதகம், கொழுக் கட்டை, தேங்காய், பழவகை என்பவை சதுர்த்திக்கான விசேஷ நைவேதனப் பொருட்களாம்.

பிள்ளையாரை மஞ்சள், புற்றுமண், சாணம், சந்தனம், மரம், கருங்கல், இரும்பு, வெள்ளி, பவுண், பஞ்சலோகம் என்பனவற்றில் உருவகித்து நாம் வழிபாடுகளைச் செய்து வருகின்றோம். வீடு குடிபுகும்போது பிள்ளையார் படமே முதலில் வைக்கப்படும் படமா கும். கிரியை ஆரம்பத்தில் பிள்ளையார் வழிபாடே முதலில் இடம் பெறுகின்றது. விக்கினங்களைப் போக்கும் விக்கினராஜன் அவர் அல்லவா? சித்திகளைக் கொடுப்பதால் சித்தி விநாயகர் ஆகின்றார். இளம் பிறையைச் சூடியதால் பாலச் சந்திரன் என அழைக்கப்படு கின்றார்.

பிள்ளையாரின் யானை முகத்தையும், பானை வயிற்றையும், பெரும் செவிகளையும் கொண்ட பெரும் தோற்றத்தைக் கண்ட சந்திரன் அதிசயித்து நகைத்து ஏளனஞ் செய்தமையால் கோபமுற்ற பிள்ளையார் ''சந்திரா! நீ என்னை நையாண்டி செய்தாய் ஆகை யினால் இந்நாளில் அதாவது ஆவணிச் சதுர்த்தி தினத்தில் உன்னைப் பார்ப்பவர்கள் எல்லோரும் பழிபாவங்களை அடையக் கடவர்'' என ஜபித்தார். இதனால் நான்காம் பிறைச் சந்திரனை ஒருவரும் பார்க்கக் கூடாது என்ற ஐதீகம் வரலாயிற்று.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

என்று கூறி விநாயகப் பெருமானைத் துதி செய்து கொண்டு ஆவணி மாதத்தில் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண பகவானின் ஜயந்தியை நோக்குவோம்.

## ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யவே ஸ்ரீ கிருஷ்ணா வதாரம் நிகழ்ந்தது. ஆவணி மாதத்து தேய்பிறையின் எட்டாம் நாள் ரோஹினி நட்சத்திரத்துடன் கூடி வருவது ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்த திருநாள் ஆகும். கணவன் மனைவி இருவருமே சேர்ந்து இவ்விர தத்தை நோற்கலாம், பகல் முழுவதும் உபவாசம் இருந்து இவ்விர தத்தை நோற்றல் நன்று.

மாடுகள் வயிராற மேய்ந்து களைப்பாறி மகிழ்ச்சியுடன் வீடுவரும் அந்தி வேளையிலே இவ்விரதத்துக்கான பூஜைகளைச் செய்தல் வேண்டும். உறியில் இருந்து வெண்ணையைத் திருடி உண்டவன் கண்ணன் அல்லவா! ஆகவே, கண்ணபிரானுக்கான பூஜையில் பால், தயிர், வெண்ணை, அவல், பொரி, கற்கண்டு, வாழைப்பழம், நாவல்பழம், கொய்யாப்பழம், திராக்ஷைப்பழம் விளாம்பழம் என்பன வற்றை வைத்து நைவேதனஞ் செய்தல் நல்லது. ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியையொட்டி மஹாவிஷ்ணு ஆலயங்களில் மஹோற்சவம், உற்சவம், சங்காபிஷேகம், லக்ஷார்ச்சனை என்பன சிறப்பாக இடம் பெறுகின்றன. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில், பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுரக் கோவில், சுன்னாகம் மயிலணி ஸ்ரீ ஆதி விஷ்ணு ஆலயம் ஆகிய ஆலயங்களில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியன்று உறியடித்திருவிழா கோலாகலமாக இடம்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணம் பெருமாள் கோவில், டெஹிவளை விஷ்ணு கோவில் களிலும் இத்தினத்தில் சிறப்பான உற்சவம் நிகழ்ந்து வருகின்றது.

## ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்

இனி, ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தை அறிய முயல்வோம். ஸ்ரீ வரலக்ஷ்மி தேவி பாற்கடலிற் தோன்றினாள் எனப் புராணங்கள் எடுத்தியம்பு கின்றன. அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தருபவள் ஸ்ரீ லக்ஷ்மி மாங்கல்யத்தைத்தந்து மங்கள வாழ்வைத்தருபவளும் ஸ்ரீ லக்ஷ்மியே தான். ஆகவே சுமங்கலிகள் தங்கள் கணவன் நீடுழி வாழவும் தங்கள் மாங்கல்யச் சரட்டுக்குமாகவும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றார்கள். கன்னியர்கள் தங்களுக்குக் கண்ணிறைந்த கணவன் கிடைக்க வேண்டும் என இந்த விரதத்தை நோற்கின்றனர்.

இவ்விரதத்துக்கான பூஜைகளைச் சிவாச்சாரியார் ஒருவரை வீட்டிற்கு அழைத்து அவர் தலைமையிற் செய்தல் வேண்டும். கும்பத்திலே ஸ்ரீ வரலக்ஷ்மி தேவியை ஆவாகித்துப் பூஜைகள் இடம் பெறுகின்றது. நோன்புச் சரட்டு நூலில் ஒன்பது முடிச்சுக்கள் போட்டு நடுவிலே ஒரு பூவையும் வைத்துக் கட்டி அதனை ஒவ்வொரு பெண்ணும் பூஜைக்கு முதலிலே கும்பத்தில் சாத்தி வழிபாடுகள் செய்ய வேண்டும். சாதம், பாயாசம், வடை, லட்டு, பழவகை, வெற்றிலை பாக்கு மஞ்சள் என்பனவெல்லாம் பூஜையில் வைக்கப்பட வேண்டிய பொருட்களாகும். பூஜைகள் நிறைவேறியதும் வீட்டுத் தலைவியாக உள்ள சுமங்கலி, தான் முதலில் நோன்புச் சரட்டு நூலைக் கட்டிய பின் ஏனைய சுமங்கலிகளுக்கும் கன்னியர்க்கும் நோன்புச் சரட்டு நூலைக் கட்டி அவர்களை ஆசீர்வதிப்பது வழக்கம், சுமங்கலிகள் தங்கள் பதியை மட்டும் வீழ்ந்து வணங்கி ஆசிகள்

பெறுவது பண்டு தொட்டு உள்ள மரபு ஆகும். இவ்வழிபாட்டால் மாங்கல்ய வாழ்வு வலுப்பெற்றுச் சௌபாக்கிய வாழ்வு சகலருக்கும் கிட்டுகின்றது.

## ஆவணி மூலம்

அடுத்ததாக நாம் ஆவணி மூலத் திருநாளை நோக்குவோம். திருவாதவூரடிகளுக்காக சுந்தரேஸ்வரப்பெருமான் மதுரைமாநகருக்கு எழுந்தருளி அருள் பாலித்ததினம் ஆவணி மூல நன்நாள் ஆகும். பாண்டிய மன்னனின் முதன் மந்திரி திருவாதவூரர். மன்னனுக்கு நல்ல இனத்துக் குதிரைகள் தேவைப்படவே முதன் மந்திரியிடம் இலக்கண வரம்புக்குட்பட்ட குதிரைகளை வாங்கிவரும்படி பணித்தான். அவர் சென்ற திசையிலே திருப்பெருந்துறையில் உபதேசித்தருளவே அவர் சிவ சிந்தனையாளரானார். எம்பெருமான் குதிரைப் பாகனாகிக் குதிரைகளை வழிநடத்தி மதுரை நகருக்குத் திருவாதவூரருடன் செல்வராயினார். குதிரைவரும் செய்தி கேட்ட மன்னன் மகிழ்ச்சி பொங்கப் படைகள் புடைசூழ வரவே அங்கே குதிரைகள் இல்லை. நரிகளே ஊழையிட்டன. இதனைக் கண்ணுற்ற திருவாதவூரர் பயந்து எம்பெருமானை மெய்யார வாழ்த்தி வணங்கவே நரிகள் எல்லாம் நல்ல ரகக் குதிரைகளாக உருவெடுத்துக் காட்சி கொடுத்தன. பாண்டிய ராஜாவுக்கும் திருவாதவூரருக்கும் ஆவணி மூல நாளிலே எம்பெருமான் நேரில் வந்து மதுரையில் காட்சி கொடுத்தார்.

நரிகளைக் கண்ணுற்ற பாண்டிய மன்னன் கோபத்தால் திருவாதவூரரைத் தண்டித்தான். திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட சிவனடியார் திருவாதவூரர் அல்லவா? ஆகவே இறையருளால் வைகை ஆறு பெருக்கெடுத்தோடத் தொடங்கியது. மன்னன் வைகை ஆற்றை அடைக்க உத்தரவிட்டான். அங்கு வாழ்ந்த சிவபக்தி கொண்ட செம்மனச் செல்வியின் பங்கை அடைக்க ஆளில்லை. அவள் தனிமையாகவே வாழ்ந்து பிட்டு விற்றுச் சீவியம் நடத்தி வந்தாள். ஆகவே அவள் எம்பெருமானை நொந்து வழிபடவே அவர் கூலி ஆள்போல கூடையும் மண்வெட்டியுங் கொண்டு தாம் செம்மனச் செல்வியின் பங்கை அடைக்க ஒப்புக் கொண்டார். அதற்குக் கூலியாக அவள் பிட்டுக் கொடுத்தாள். வைகை ஆற்றங்கரையில் செம்மனச் செல்வியின் பிட்டைச் சுவைத்து உண்டு எம்பெருமான் திருவிளையாடல் புரிந்தார். ஆற்று அணை அடைக்கப்படவில்லை. மன்னன் வந்தான். கோப முற்றுத் தடியால் கூலியாள்போல வந்த எம்பெருமானை அடித்தான். அந்த அடி மூவுலகுக்கும் படலாயிற்று. தெய்வ அன்பையும், பக்தி மேம்பாட்டையும் குறிப்பாகத் தெய்வ நீதியையும்

சகலரும் அறிந்து கொண்டனர். இவை ஆவணி மூல நட்சத்திரத்தில் நடந்ததால் அங்கு ஆவணி மூல வீதியே வரலாயிற்று. அன்பே சிவம் என்ற உன்னத கருத்தை இந்நிகழ்ச்சிகள் எப்பொழுதும் எடுத்தியம்பிய வண்ணம் உள்ளன.

## ஆவணி ஓணம்

இனி நாம் ஆவணி ஓணம் பற்றிச் சிந்திப்போம். ஆவணி மாதத்துத் திருவோண நட்சத்திரத்தை ஆவணி ஓணம் என அழைப்பர். இது ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேக நாட்களுள் ஒன்று. ஆடல் அரசன் மீது பேரன்பு கொண்ட பக்தர்கள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றார்கள். இந்நாளில் ஸ்ரீ நடராஜர் தரிசனம் மிகவும் சிறந்தது. ஆவணிமூலம், ஆவணி ஓணம், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி, விநாயக சதுர்த்தி ஆகிய தினங்களில் கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வர சுவாமி தேவஸ்த்தானத்தில் அதி சிறப்பாகக் கொண்டாடப்படுவது ஈண்டு குறிப்பிடற்பாலது. இலங்கையில் உள்ள மலயாள வம்சத்தினர் ஓணம் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

## ஆவணி ஞாயிறு

ஆவணி மாதத்துத் திதி, நட்சத்திர விசேஷங்களை நோக்கிய நாம் இனி ஆவணி ஞாயிறு எனப்படும் நாள் விசேஷத்தைப் பார்ப் போம். ஜோதிடத்தில் ஆவணி மாதம் சிங்கமாதம் எனப்படும். ஆவணி மாதம் சிங்கராசியில் சூரிய பகவான் பிரவேசிப்பதால் ஆவணி மாதத்து ஞாயிற்றுக் கிழமைகள் அனைத்துமே விசேஷங்கொண்டவை. சூரிய வழிபாட்டுக்கு உகந்த நாள் ஞாயிற்றுக் கிழமை ஆகும். ஆகவே ஆவணி ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியனுக்குப் பொங்கல் செய்து படைத்து விரத அனுஷ்டானங்களுடன் வழிபாடுகள் செய்து வருகின்றோம்.

## உபாகர்மம்

பிராம்மணர்களை இரு சிறப்பாளர் என்பர். பிராமணவம்சத்திற் பிறந்து பூனூல் தரித்து காயத்திரி மஹாமந்திர உபதேசத்தைப் பெற்றபின் பிரமச்சாரியத்தை அடையும் ஒருவர் பின் இல்லறத்துக்கு வந்து அதன்பின் அவர் தகுதிக்கேற்பச் சிவாச்சாரியர் ஆகின்றார். இவ்வாறு பூனூல் தரித்தவர்கள் எல்லோரும் ஆவணி மாதத்தில் உபாகர்மம் எனும் பூனூல் மாற்றம் சடங்கைச் செய்தல் வேண்டும். இது தமது குல வழக்கப்படி நடைபெறுவது ஆகும். சாமிதா தானம் காமோகாரஷி ஜயம், தர்ப்பணம், பூனூல் மாற்றல், ஹோமம்

என்பன நடைபெறும். உலகில் உள்ள சகல பிராமணர்களும் தேவ, ரிஷி, பிதுர் வழிபாடுகளுடன் தர்ப்பணஞ் செய்கின்றனர். இஃது உலகில் உள்ள சகல ஜீவராசிகளும் நல்வாழ்வு வாழ ஒரே தினத்தில் நடைபெறும் தலைசிறந்த வழிபாடாகும். மறுநாள் இவர்கள் அனைவரும் ஸ்ரீ காயத்திரி மஹா மந்திரத்தை ஜபஞ் செய்வது வழக்கம்.

ஆவணி மாதத்து சோமவாரம், பிதோஷம், சஷ்டி, கார்த்திகை ஆகிய தினங்களில் தெய்வ வழிபாட்டையும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் பிதுர் வழிபாட்டுடன் தெய்வ வழிபாட்டையும் செய்து வாழ்வது சிறந்தது.

ஆவணி மாத கிருஷ்ண பக்ஷ எகாதசி காமிகா எனப்படும். நெய்தீபம் ஏற்றுதல், தீபதானஞ் செய்தல் என்பன இந்நாளிற், சிறந்தவை, மோக்ஷவாழ்வுக்கு இவ்விரதம் சிறந்தது. ஆவணிச் சுக்ல ஏகாதசி புத்ரதா என்பதாம். புத்ர பாக்யத்தைப் பெற இவ்விரதம் சிறந்தது. ஆவணியில் பகவானின் சதுர் (நான்கு) மாஸ்யம் ஆரம்பிக்கின்றது. ஆகவே சதுர் மாஸ்ய விரதம் இருப்போர் ஆவணியில்காய் கறிகளை உண்பதில்லை. ஆவணி ஏகாதசியில் விஷ்ணு வழிபாடு செய்து வாழ்வது நன்று.

ஆவணி மாதம் விநாயகர், சிவன், கிருஷ்ணர் ஆகிய மூர்த்தி வழிபாட்டிற் கேற்ற மாதம் என்பதையும் ஏனைய விசேஷ தினங்களையும் இது வரை நாம் கண்ணுற்றோம். விரத அனுஷ்ட்டானங்களுடன் தெய்வ அனுக்கிரகத்தைப் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!

# கிரகதோஷ நிவிர்த்தியுடன் அம்பாள் வழிபாட்டினைக் கொண்ட புரட்டாதி

## புரட்டாதி மாத விசேஷங்கள்

புரட்டாதி மாதத்தை நோக்குமிடத்து இம்மாதம் மூர்த்தி வழி பாடு, கிரக வழிபாடு, பிதுர் வழிபாடு என்பன கொண்ட சிறந்த மாதமாக மிளிர்வதை நாம் காணலாம். புரட்டாதி என்றதும் புரட்டாதிச் சனி, நவராத்திரி, கோதாரகௌரி, மஹாளயம் என்பன எம்மனதில் தோன்றும்.

## புரட்டாதிச்சனி

இந்நோக்கில் புரட்டாதி மாத வார வழிபாடாக உள்ள சனி வாரத்தை நோக்குவோம். சனியைப்போல கொடுப்பவரும் இல்லை சனியைப்போல கெடுப்பவரும் இல்லை என்பது முதுமொழி. ஆம்! இதனாலேயே பக்தர்கள் மத்தியில் சனிக்கு பயமும் உண்டு. ஏழரைச்சனி, அட்டமத்துச் சனி, ஜன்மத்துச் சனி, சனி பார்வை என்பன உள்ள காலங்களில் விசேஷமாகச் சனி வழிபாட்டினை நாம் மேற்கொள்ளல் வேண்டும். எனினும் பன்னிரு மாதங்களில் புரட்டாதி மாதமே சனி வழிபாட்டு மாதமாக உள்ளதால் புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் சமய அநுஷ்டானங்களுடனான வழிபாட்டினை நாம் எல்லோரும் மேற்கொள்ளுகின்றோம்.

சனிக்கிழமைகளில் நல்எண்ணை தேய்த்து அரப்பு, எலுமிச்சம் பழம் என்பன வைத்து நன்கு முழுக வேண்டும். பின்பு கோவிலுக்குச் சென்று சனீச்சரன் சந்நிதியில், எள்எண்ணை விளக்கு ஏற்றி வழி பாடுகள் செய்தல் நன்று. கறுப்பு நிறத்துணியையும் நீல நிற மாலையையும் சனீச்சரப் பெருமானுக்குச் சாத்தி, கருங்குவளைப்பூ, நீல நிறப்பூ, வன்னி இலை என்பனவற்றால் அர்ச்சனை செய்து நமக்கு உள்ள சனி தோஷத்தைப் போக்கி நல்வாழ்வைத்தரும்படி வேண்டுதல் வேண்டும். கறுப்பு நிற எள்ளைச் சிவாச்சாரியாருக்குத் தானமாகக் கொடுக்கலாம். எள்ளுக்கலந்த சாதத்தை நைவேதனஞ் செய்து அதனைக் காகத்துக்கு உணவாகக் கொடுக்க வேண்டும். இவைகளின் பின்பு சிவன், விஷ்ணு முதலான தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்து வழிபாடுகளைச் செய்ய வேண்டும். ஒரு பாத்திரத் தில் நல்எண்ணையைவிட்டு சனீச்சரனுக்கு அர்ச்சனை நடைபெறும் வேளையில் நல்எண்ணையுள் நமது முகத்தைப் பார்த்து அர்ச்சனை

நிறைவுற்றுக் கற்பூர ஹாராத்தி காட்டிய பின் நல்லெண்ணையையும் பாத்திரத்தையும் சிவாச்சார்யாருக்குத் தானமாகக் கொடுப்பது சாயாதானம் எனப்படும்.

திருநள்ளாற்றில் உள்ள சனீச்சரன் சந்நிதியில் மேற்கூறிய வழிபாட்டு முறைகள் உள. சீர்காழியில் சனியுடன் ராகுவும் உள்ள தால் இங்கும் பக்தர் தரிசனஞ் செய்கின்றனர். இலங்கையில் திருகோணமலையில் உள்ள சனீச்சரன் ஆலயம் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. சனிதோஷ நிவர்த்திக்கான வழிபாடுகள் இங்கு சிறப்புற நடை பெறுகின்றன. இவ்வாலயம் தற்போது புனரமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம், யாழ் பெருமாள் கோவில், பருத்தித்துறை வல்லிபுரக் கோவில், தெஹிவளை பெருமாள் கோவில்களிலும், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், கீரிமலைச் சிவன்கோவில், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர தேவஸ்தானம் முதலான ஆலயங்களில் புரட்டாசிச் சனிக்கிழமை வழிபாட்டிற்கு எண்ணிறைந்த பக்தர்கள் சென்று வழிபடுவது இங்கு குறிப்பிடக்கூடியதொன்று.

''முனிவர்கள் தேவர் ஏனைய மூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மஹிமை அல்லால் வேறுண்டோ
கனிவுளதெய்வம் நீயே,, கதிர்சேயே காகம் ஏறும்
சனியனே! உனைத் துதித்தேன் தமியேனேற் கருள் செய்வாயே!''

எனச் சனீச்சரபகவானைத் தொழுவோமாக! சூரியனின் மகனான சனைச்சரன் தலைசிறந்த சிவபக்தன். சிவபூஜா துரந்தரன். ஆகையினால் சனீஸ்வரன் எனவும் அழைக்கப்படுகிறார்.

சனிதோஷம் உள்ளவர்கள் தினமும் மதிய போசனச் சமையல் முடிந்ததும் சமைத்தவற்றில் சிறிதளவு எடுத்துக் கறுப்பு எள்ளு அல்லது நல்லெண்ணை கலந்து காகத்துக்கு உண்ணக் கொடுத்தபின் மதிய போசனஞ் செய்தல் மிகச் சிறந்தது.

**மஹாளயம்**

இனி நாம் புரட்டாதி மஹாளயத்தை நோக்குவோம். புரட்டாதி மஹாயள காலம் பிதுர்களின் இரவுக்காலம் ஆகும். பிதுர்களுக்கான இரவுகால வழிபாடாக இஃது அமைந்துள்ளமை நோக்கற்பாலது. புரட்டாதி அபரபக்ஷம் அதாவது தேய்பிறை முழுவதும் மஹாளய காலம் ஆகும். இஃது புரட்டாதி அமாவாசையுடன் முடிவுகின்றது. தாய், தந்தை அற்றவர்கள், அவர்கள் இறந்த திதித் தினத்தில் சிரார்த்தம் எனப்படும் திவசம் செய்து பிதுர்களைத் திருப்திப்படுத்து வர். அன்று சிவாச்சார்யர் ஒருவர் தலைமையில் பிதுர்களை

திருப்திப்படுத்துவர். அன்று சிவாச்சார்யர் ஒருவர் தலைமையில் பிதுர்களை அமைத்து பிண்டம் போட்டுப் படையல் படைத்து நைவேதனஞ் செய்து எள்ளுந் தண்ணீரும் பிதுர்களின் திருப்திக்காக இறைத்துப் பிதுர் வழிபாடுகளை நிறைவேற்றுவது வழக்கம். இதன் பின்பு சிவாச்சார்யருக்கு அரிசி, காய்கறி, வஸ்த்திரம், தக்ஷணை கொடுத்து அவரின் ஆசியைப் பெற்று வாழ்வது எமது மரபாக இருந்து வருகின்றது. பலர் புரட்டாதி அமாவாசையன்று இவைகளை நிறைவேற்றுகின்றனர். அனர்த்தங்களால் இறந்தவர்களின் திதி தெரியாதோர் புரட்டாதி அமாவாசையன்று இப்படியாகப் பிதுர் வழிபாட்டினைச் செய்தல் நன்று.

## நவராத்திரி

புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை உள்ள நாட்கள் அனைத்தும் நவராத்திரி நாட்கள் எனப்படும். தேவியைக் கும்பத்திலே ஆவாகித்து வழிபடும் மரபு இன்றும் நம்மிடையே இருந்து வருகின்றது. கோவில், வீடு, பாடசாலை, அலுவலகம், யந்திரசாலை, வர்த்தக நிலையம் போன்ற எல்லா இடங்களிலும் நவராத்திரி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருவது ஈண்டு குறிப்பிடற்பாலது. முதல் மூன்று நாட்களும் துர்க்கை வழிபாடு இடம் பெறும். துர்க்கம் என்றால் அகழி எனப் பொருள் படும். நமது பகைவர், நமக்கான இன்னல் இடர் போன்றவற்றை யெல்லாம் அகழி போல இருந்து அத்துன்பங்களிளின்றும் எம்மை மீட்டருளுகின்றாள் துர்க்காதேவி என்பது தெளிவாகின்றது.

அடுத்து வரும் மூன்று நாட்களும் லக்ஷ்மிதேவிக்காக வழிபாட்டு நாட்களாம். கடைசி மூன்று நாட்களும் சரஸ்வதிதேவிக்கான நாட்கள் ஆகும். சரஸ்வதி வழிபாட்டில் ஆயுத பூஜை முதலிடத்தை வகிக் கின்றது. புத்தகம், அலுவலக ஏடுகள், உளி, வாள் போன்ற பல்வேறு பொருட்கள் அவரவர் செய்யும் தொழிலுக்கான ஆயுதங்கள் எல்லாம் வைக்கப்பட்டுப் பூஜைகள் சிறப்புற இடம் பெறும். 10ஆம் நாள் மஹாநோன்பு மானம் பூவுடன் நிறைவுறும்.

சுபாசினி பூஜை இக்காலத்தில் சிறப்பாக இடம்பெறும். முதலாம் நாள் ஒரு வ்யதுச் சிறுமிக்கான உபசரனைப் பொருட்களைக் கொடுத்து வழிபாடுகள் இடம்பெறும். 2, 3, 4, 5, 6, 8 என்ற வயதுப்படி அது நாளுக்குநாள் வளர்ந்து ஒன்பதாம் நாள் ஒன்பது வயதுச் சிறுமிக்கு உபசரணைகள் செய்து வழிபாடுகள் இடம்பெறுவது வழக்கம்.

புரட்டாதி மாஹாளய அமாவாசை நிறைவுற்றதும் பிதுர் வழிபாட்டுடன் பிதுர்களின் ஆசியுடன் அம்பாள் வழிபாடு கொலுப்

பொம்மைகள் வைக்கும் பணியுடன் ஆரம்பமாகின்றது. பரம்பரை பரம்பரையாகவே பல வீடுகளில் பொம்மைகள் கொலு வைக்கப் பட்டுப் பூஜைகள், இயல், இசை, நடன நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைவிழாவாக நவராத்திரி மிளிர்வதை நாம் காணமுடியும். கோலாட்டம், கும்மி என்ற வகையில் ''கன்னித்திங்கள் வருகுது ஐயா கருத்துடன் நவராத்திரியாம்'' எனத் தொடங்கும் பாடல்களைப் பாடி ஆடிப் பள்ளி மாணவ மாணவியர் மகிழ்விப்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவியர்க்குமான ஆலயம் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளது. திருமலை திரு பத்திரகாளி கோவிலில் இம்மூன்று தேவியரும் பிரதிஷ்டை செய்யப்பட்டுளர். இவ்விரதத்தை ஸ்ரீ இராமபிரான் நோற்றுச் சீதாபிராட்டியார் இருக்கும் இடத்தை அறிந்ததாக தேவிபாகவதம் கூறுகின்றது.

பத்தாம் நாள் வன்னி மரத்திற்கு அம்புபோடும் வழக்கம் உள்ளது. வன்னி மரத்தில், மரம், முள், இலை என்பன உண்டு. இவை ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களுக்கு ஒப்பானவை. ஆகவே வன்னி மரத்துக்கு அம்பு போடுவதால் ஆன்மாக்களின் மும்மலங்கள் களையப்படுகின்றன எனப் பொருள் படும். புரட்டாதி மாத நவராத்திரியை சாரதா நவராத்திரி எனவும் அழைப்பார். கொட்டாஞ்சேனை ஸ்ரீ வீரமஹாகாளி, மாரி அம்மன், மயூராபிளேஸ் காளி, நயினை நாகபூஷணி, சீரணி நாகபூஷணி தெல்லிப்பளை துர்க்கை, திருமலை பத்திரகாளி போன்ற அம்பாள் ஆலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் பாடசாலை, கல்லூரிகளிலும் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## கேதாரகௌரி விரதம்

புரட்டாதி மாத வளர்பிறை அட்டமியில் ஆரம்பமாவது ஸ்ரீ கேதாரகௌரி விரதம் ஆகும். இஃது ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். தேவியானவள் சிவபெருமானை நோக்கிச் சிவபூஜை செய்து நோற்றுப் பெரும்பேற்றினைப் பெற்ற விரதம் இதுவாகும். முதலாம் நாள் ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு பழம், ஒரு அதிரசம் என்று வைத்து நைவேதனம் செய்து வழிபாடுகள் இடம்பெறும். முதலாம் நாள் கேதாரகௌரி நோன்புக் கயிற்றில் ஒரு முடிச்சுப் போடப்படும். இப்படியாக ஒவ்வொரு நாளும் நைவேத் தியவகை ஒவ்வொன்றாகக் கூடும். நோன்பு நூல் முடிச்சுக்களும் கூடிக்கொண்டே வரும். இருபத்தொராம் நாள் இருபத்தொரு வெற்றிலை, இருபத்தொரு பாக்கு, இருபத்தொரு பழம், இருபத்தொரு மஞ்சள், இருபத்தொரு அதிரசம் என்பன கொண்ட நிறைவு நாளில்

நோன்புச் சரட்டு நூலிலும் இருபத்தொரு முடிச்சுக்கள் காணப்படும். பூஜையின் முடிவில் அனைவரும் நோன்புச் சரட்டு நூலைத் தரித்துக் கொள்வர்.

### புரட்டாதிச்சனியும் நவராத்திரியும்

நவராத்திரி காலத்தில் வரும் புரட்டாதிச் சனிக்கிழமை வழிபாடுகள் வழமைபோல நடைபெற வேண்டும். எண்ணை தேய்த்து முழுகுவதை மட்டும் நீக்கவேண்டும். கிரக வழிபாட்டின் பின் மூர்த்தி வழிபாடு செய்தல் வேண்டும் என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். சனிக்கிழமை வழிபாடு புரட்டாதி மாத வார வழிபாடு. நவராத்திரி மூர்த்தி வழிபாடு இவை இரண்டும் இம்மாதத்திற்கே உரியன. ஆகையினால் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் கிரகப்பிரிதி வழிபாடு செய்து பின் மூர்த்தி வழி பாட்டினைச் செய்தல் உத்தமமானதே.

சனைச்சரன் சந்நிதியிலும் நவக்கிரக சந்நிதியிலும் சிவாச்சாரியார் தரும் வீபூதியை நாம் தரிக்கவேண்டும். பூ, வில்வம் முதலானவற்றை ஆண்கள் காதிலும் பெண்கள் சிரசிலும் தரித்துக் கொள்ளல் வேண்டும். இவைகளை உதாஸீனமாக விடக்கூடாது. இவைகள் கிரகப் பிரிதி செய்து தரப்படும் பிரசாதங்களாகும். அவைகளைத் தரித்து நாம் நல் வாழ்வு வாழவேண்டும்.

ஸ்ரீ நடராஜப்பெருமானின் அபிஷேகநாள் புரட்டாதிப் பூர்வ பக்ஷ சதுர்த்தசியில் உள்ளது. ஆடலரசனின் அநுக்கிரகத்தை வேண்டி அபிஷேக தரிசனஞ் செய்து பூஜை வழிபாடுகளைக் கண்ணுற்று மெய்யார வணங்கி அவனருளை வேண்டி வழிபடல் வேண்டும்.

புரட்டாதி மாதத்தில் வரும் சதுர்த்தியன்று பிள்ளையாரை வழிபடல் நன்று. பிரதோஷ கால வழிபாட்டில் நந்தி சிவன் அம்பாள் தரிசனம் விசேஷமானது. கார்த்திகை, சஷ்டித் தினங்களில் முருகனை வழிபடல் சாலச்சிறந்தது. பௌர்ணமித் தினத்தில் அம்பாள் தரிசனஞ் செய்து அம்பாளின் அநுக்கிரகத்துக்காக வழிபாடுகளை மேற் கொள்ளல் நல்லது. சோம வாரத்தில் சோம வார தரிசனஞ் சிறந்தது. புரட்டாசிக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி அஜா எனப்படும். இத்தினத்தில் விரதம் இருந்தால் முற்பிறப்புப் பாபங்களைப் போக்க லாம். இம்மாதத்துச் சுக்ல ஏகாதசி பத்மநாபா ஆகும். வான்ம் பொழிந்து பூமி செழிக்க இவ்விரதம் மேலானது. சதுர் மாஸ்ய விரதமிருப்போர் புரட்டாசியில் தயிர் சாப்பிடுவதில்லை. மஹா விஷ்ணுவுக்கான ஏகாதசி விரதம் இருத்தல் சிறப்பானது.

இது காறும் புரட்டாதி மாதமானது மூர்த்தி, பிதுர், வார வழிபாட்டினைக் கொண்ட மாதம் என்பதைக் கண்ணுற்றோம். ஆகையினால் புரட்டாதி மாத விசேஷ நாட்களில் விரத அநுஷ்டானங் களுடன் சுவாமி தரிசனஞ் செய்து நல்வாழ்வு வாழ்வோமாக!

## சைவத்தின் உயர்ந்த தத்துவங்களை விளக்கும் ஐப்பசி

இந்துக்களுக்கு ஒரு பண்டிகை மாதமாகவும் விரத அனுஷ்டான மாதமாகவும் ஐப்பசி மாதம் அமைகின்றது. புரட்டாதி மாதத்தை அடுத்த திருமண மங்கள மாதமாகவும் இஃது உள்ளது. சிறியோர் முதல் முதியோர் வரை ஐப்பசி என்றதும் தீபாவளி தினத்தையே நோக்குவர். பலவித இன்னல் இடர் மத்தியிலும் இந்துசமய விசேஷங்களை அனுஷ்ட்டிக்கவேண்டும் என்பது மரபு ஆகும். இதுவே வாழ்வின் வெற்றிகளுக்கு உறுதுணையாகவும் அமைகின்றது.

### தீபாவளி

தீப ஒளித் திருநாள் தீபாவளி ஆகும். அறியாமை, அகந்தை, மமதை முதலான இருளில் இருந்து விடுபட்டுப் பேரொளியைக் கண்ட நரகாசுரன் எனும் அரக்கனின் வேண்டுதலுக்குக் கிடைத்த அருளே தீபாவளித் திருநாளாகும். நரகாசுரன் இறுமாப்புடன் தேவர்களுக்கு இன்னல் இடர்களை கொடுக்கவே அவனை மஹாவிஷ்ணு அடக்கிய போது தான் இருளில் இருந்து விடுபட்டுப் பேரொளியை இறக்கும் போதேனும் கண்டமையால் இத்தினத்தைச் சகலரும் கொண்டாட வேண்டும் என வேண்டினான். அதுவே தீபாவளிப் பெருநாளாக அமைந்தது.

இந்துக்கள் எல்லோரும் தீபாவளியன்று காலை எண்ணை வைத்து ஸ்னானஞ் செய்து புத்தாடை உடுத்து வீட்டிலும், கோவில்களிலும் சுவாமி தரிசனஞ் செய்தபின் உற்றார் தத்தமது வசதிகளுக்கேற்பப் பல்வகை உணவுகளை உண்டு மகிழ்வதே தீபாவளிப் பண்டிகையாகும். கோவில்களிலும் வீடுகளிலும் தீபங்களை ஏற்றுவதும் ஒரு வழிபாட்டு முறையாகும். சிறுவர், சிறுமியர் மத்தாப்பு வெடி கொழுத்துவதும் ஒரு வழக்கமாகும். இவைகள் அனைத்தினதும் உள்ளார்ந்த தத்துவம் ஞான ஒளிக்கான வழிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதாம்.

### ஐப்பசி வெள்ளி

சுக்கிரவார விரதம், அல்லது வெள்ளிக்கிழமை விரதம் என்பது இந்துக்களிடையே மிகவும் பிரபல்யமானதொன்று. வெள்ளியன்று வீடு வாசல் கழுவி மெழுகிக் குத்து விளக்குகள், பாத்திரங்கள் யாவும் விளக்கப்பட்டு முழு வீடும் சுத்தமாக இருக்கும். அன்று சகலரும் வெள்ளிக்கிழமை விரதத்தை அனுஷ்டிப்பர்.

எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் 'சுக்கிரவார உற்சவம்' முருகன் ஆலயங்களில் நடைபெற்று வருகின்றது. வெள்ளிக்கிழமை விரதம் முருகப்பெருமானுக்கு உரியதாகும். மாலைப்பூசை, அல்லது சுக்கிரவார உற்சவம் முதலியனவற்றில் சுவாமி தரிசனத்தின்பின் விரதமிருப்போர் உணவு உண்பது மேலானது. இயலாத பட்சத்தில் மதிய போசனத்துடனும் வெள்ளிக்கிழமை விரதத்தைப் பலரும் நிறை வேற்றி வருகின்றனர். இவ்விரதம் சங்கற்பித்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு நோற்கப்பட வேண்டியதாகும். சிறப்பான வாழ்வை இவ்விரதம் தரவல்லது.

## கேதாரகௌரி விரதம்

இஃது இருபத்தொரு நாட்களைக் கொண்டது. புரட்டாதி, வளர்பிறை அட்டமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசிச் சதுர்த்தசிவரை உள்ள நாட்கள் கேதாரகௌரி விரத அனுஷ்டான தினங்களாம்.

கேதார கௌரி அம்பாள் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அருளை வேண்டி நோற்ற விரதமே கேதாரகௌரி விரதமாகும்.

கோவில்களிலும் வீடுகளிலும் தேவியைக் கும்பத்தில் ஆவாகித்து வழிபடும் முறை இன்றும் உள்ளது. மண்ணினால் செய்த சிவலிங்கத்தையும் அம்பாளையும் வைத்து வழிபடும் முறையும் உண்டு. முதலாம் நாள் ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை, ஒரு பழம், ஒரு அதிரசம், ஒரு மஞ்சள், வைத்து பூஜை செய்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் ஒரு முடிச்சு இடப்படும். அவ்வாறு வழிபாடுகள் தினமும் நடைபெற்று இருபத்தொராம் நாள் இருபத்தொரு பாக்கு, இருபத்தொரு வெற்றிலை, இருபத்தொரு பழம், இருபத்தொரு மஞ்சள், இருபத்தொரு அதிரசம், தேங்காய், இருபத்தொரு முடிச்சுக் கொண்ட காப்பு நூல் முதவியனவற்றுடன் விசேஷ பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறும். விபூதி பிரசாதத்தை அணிந்தபின் அடியார்கள் கோவில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடது கையிலும் அணிந்து கொள்வர்.

அதிரசம் இனிப்பானது. உப்பு சற்றேனும் கலக்கப்படாதது. ஆகவே கேதாரகௌரி விரதமிருப்போர் அதிரசத்தை உண்டு, இளனீர், பால், தேனீர் போன்றஏதேனும் ஒன்றை அருந்துவர். மறுநாள் அதிகாலை பாறணையுடன் விரதத்தை நிறைவேற்றுவர்.

இலங்கையிலே திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பல்லாண்டுகாலமாக கேதாரகௌரி விரத நோன்பிற்கான பூஜைகள் சிறப்புற இடம்பெற்று வருவது குறிப்பிடப்பட வேண்டிய

தொன்று. இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் இன மத வேறுபாடின்றி இவ்வாலயத்திற்கு அடியார் கூட்டம் வந்து விரத நோன்பிருந்து கௌரிக்காப்பினைப் பெற்றுச் செல்கின்றார்கள். சுன்னாகம் கதிரைமலைச் சிவன், ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயங்களிலும் இவ்விரத பூஜைகள் உள.

## ஸ்கந்த சஷ்டி

ஐப்பசி மாதத்தில் வரும் இன்னுமொரு மகோன்னத விரதம் ஸ்கந்த சஷ்டி விரதம் ஆகும். ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டித் திதி வரையுள்ள தினங்கள் முருகப்பெருமானின் திருநாட்களாகும். முருகன் அடியார்கள் இக்காலத்தில் உபவாசம் இருப்பர்.

கோவில்களில் முருகப்பெருமானின் ஸ்கந்த சஷ்டி உற்சவம் மகோற்சவமாகவும் யாகபூர்வமான உற்சவமாகவும், அலங்கார உற்சவமாகவும் இடம்பெற்று வருகின்றது. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், நீர்வேலி கந்தசுவாமி கோவில் கொ/கதிரேசன் தெரு கதிரேசன் கோவில், திருமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில், ஜிந்துபிட்டி முருகன் கோவில், கொம்பனித்தெரு முருகன் கோவில் முதலானவற்றிலும் ஏனைய ஆலயங்களிலும் இவ்வாறான உற்சவங்கள் பல்லாண்டுகாலமாக இடம்பெற்று வருகின்றது.

ஸ்கந்த சஷ்டி தினங்களில் பல அடியார்கள் உபவாசமிருப்பர். இவர்கள் மாலைப்பூஜை, உற்சவம் முதலியனவற்றைத் தரிசித்தபின் கோவிலிலே கொடுக்கப்படும் தீர்த்தத்துடன் ஆறு நாட்களும் உபவாசம் இருப்பர் அடியார்களுட் சிலர் மிளகும் தண்ணீரும் மாலைப்பூஜையின் பின் உண்டு உபவாசமிருப்பர். வேறு சிலர் பாலும் பழமும், அல்லது கடலை, பயறு, கௌபீ முதலான தானியங்களில் ஒன்றையோ இன்றேல் வள்ளி, இராசவள்ளி, மரவள்ளி முதலான கிழங்குவகைகளில் ஒன்றையோ உப்பில்லாமல் அவித்து உண்டு விரதம் இருப்பர். மற்றுஞ்சிலர் ஒருவேளை உணவை உண்டு ஸ்கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டிப்பர்.

கந்தபுராணம் – சூரபன்மன் படலம், திருச்செந்தூர்ப் புராணம், மயூர கிரி புராணம் முதலான புராணங்களில் ஒன்று கோவில்களில் படிக்கப்பட்டுப் பயன்சொல்லும் வழக்கம் இன்றும் உள்ளது முருகன் அடியார்கள் பயபக்தியுடன் புராணபடனத்தைக் கேட்பர். ஏனைய வேளைகளில் கந்த சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் ஆகியவற்றைப் பாராயணஞ் செய்வர்.

தேவர்களைத் துன்புறுத்திய சூரனை அழிக்க முருகப்பெருமான் எழுந்தருளினார். உமாதேவியார் ஞானசக்தியான வேலைக் கொடுத்து ஆசி கூறி வழி அனுப்பிவைத்தார். சூரன் அழியாவரம் பெற்றவன் அல்லவா? அத்தோடு அவனது நான் என்ற மமதையும் சேரவே தானே பெரியவன் என்ற எண்ணத்தில் தாரகன், சிங்கன் முதலியோர் தலைமையில் படைகளை அனுப்பி அவர்கள் மாய்ந்துபோகவே தானே முருகப்பெருமானை மாய்க்க முனைந்தான். இறுதியில் இலை, காய், கனிகளுடனான பெரிய மாமர வடிவிற்றோன்றினான். முருகப்பெருமானின் வெற்றிவாகை சூடும் வீரவேலான ஞான வேல் சூரனை இரு கூறுகளாக வீழ்த்தியது. அழியா வரம் பெற்ற சூரனின் இருகூறுகளும் சேவலும் மயிலுமாகத் தோன்றின. சூரன் மும்மலங் களினின்றும் விடுபட்டான். ஆகவே ஷண்முகப்பெருமான் சேவலைத் தன் கொடியாகவும், மயிலைத்தன் வாகனமுமாகவும் ஏற்றார்.

ஸ்கந்தசஷ்டி விரதமிருப்போர் இம் மகோன்னத காட்சியினைக் கண்டு இன்புறுவர் மகிழ்ச்சியடைவர். ஸ்கந்த சஷ்டி ஆறாம் நாள் உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலை கோவில் வழிபாட்டின்பின் சிவாச்சாரியாருக்கு அரிசி, காய்கறி, வஸ்த்திரம் முதலானவை கொடுத்துப் பின் சிவனடியார் ஒருவருக்கேனும் உணவு கொடுத்து அதன்பின் பாறணை செய்தல் உத்தமம். தற்பொழுது பலரும் சிவாச்சாரியாருக்குத் தட்சணை கொடுத்து யாரும் ஒருவருக்கேனும் உணவு கொடுத்துப் பின்பு பாறணை செய்தும் வருகின்றனர். இவ் விரதத்தை ஆறு வருடம், பன்னிரண்டு வருடம் என்ற வகையில் சங்கற்பஞ் செய்து ஆரம்பிக்கலாம், விரதகாலம், முடிவுறும் போது முருகப் பெருமானுக்கு அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை அல்லது விசேஷ பூஜை செய்து உத்தியாபனஞ் செய்தல் வேண்டும்.

**பாறணை**

கேதாரகௌரி விரதப் பாறணை தினத்தன்று பெரும்பாலும் ஸ்கந்த சஷ்டி விரதம் ஆரம்பமாகின்றது. ஆகவே கேதாரகௌரி விரதப் பாறணையை எவ்வாறு செய்யவேண்டும் எனப் பல அடியார்கள் வினவுகின்றனர்.

கேதாரகௌரிப் பாறணை தினத்தன்று சூரிய உதயத்தின் முன் வழமை போலச் சகலரும் பாறணை செய்யலாம். பாறணையிலே சாதம் சாப்பிட விரும்பாதவர்கள் கேதாரகௌரிக்கு நைவேதித்த அதிரசத்தையும் பழத்தையும் பாலையும் உண்டு பாறணையை நிறைவேற்றி சூரிய உதயமானதும் ஸ்கந்த சஷ்டி விரதத்தை மேற்கொள்ளலாம்.

அல்லது பாறணைக்கான சமையலைச் சமைத்தபின் கோவிலில் சிவாச்சாரியாருக்கு அரிசி முதலானவை கொடுத்து வீட்டில் சிவனடியாருக்கு உணவு கொடுக்க வேண்டும். பின் தமது வலது கை நிறையச் சாதம், சமைத்த கறி, குழம்பு முதலானவற்றை அதிலே விட்டு மூன்று முறை அதனை முகர்ந்தபின் பூமரத்தின் அடியில் அதனைப் போட்டுவிட்டு முகம், கை கழுவிய பின் ஸ்கந்த சஷ்டி விரதத்தை மேற்கொள்ளலாம். ஆனால் பலவித வசதியீனங்களால் இம்முறையானது இப்பொழுது வழக்கில் இல்லை.

## ஐப்பசிப் பௌர்ணமி

சிவாலயங்கள் உச்சிக் காலத்துடன் கதவு அடைக்கப்பட்டு மீண்டும் சாயரட்சைப் பூசைக்கே கதவு திறக்கப்படல் வேண்டும் என்பது விதி. ஆனால் ஐப்பசிப் பௌர்ணமியன்று சிவலிங்கத் திருமேனிக்கும், அம்பாளுக்கும் உச்சிக்காலப் பூஜையின் போது அன்னம் சாத்தப்பட்டு விசேஷ பூஜை நிகழ்ந்து மாலை சுமார் மூன்று மணிவரை சிவாலயம் அன்னாபிஷேகக் காட்சிக்காக திறந்திருக்கும். இவ்வரிய காட்சியை அடியார்கள் விசேஷமாகத் தரிசிப்பது வழக்கம். சுவாமிக்கும் அம்பாளுக்கும் சாதம், கறி குழம்பு, பாயாசம், வடை ஆகியன விசேஷ நைவேத்தியமாக அன்று நைவேதிக்கப் படுகின்றது. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ் வரத்தில் ஐப்பசிப் பௌர்ணமி வழிபாடு சிறப்பாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. ஐப்பசிச் சதுர்த்தியில் பிள்ளையாரையும், சஷ்டி, கார்த்திகையில் முருகனையும், பிரதோஷம், சோமவாரத்தில் சிவ அம்பாளையும் ஐப்பசிப் பரணியில் பைரவரையும் வழிபடல் நன்று. அமாவாசையில் பிதுர் தர்ப்பணம் தேவதரிசனமும், பௌர்ணமியில் விரதமும் விசேஷமாக சிவ அம்பாள் வழிபாடும் செய்தல் வேண்டும். ஐப்பசிக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி இந்திரா எனப் பெயர் பெறும். ஐப்பசி சுக்ல பக்ஷ ஏகாதசி பாபாங்குசா ஆகும். இவ்விருநாட்களிலும் வழமைபோல விரதம் இருத்தல் உத்தமம். சதுர்மாஸ்ய விரதமிருப் போர் ஐப்பசியில் பால் அருந்துவதில்லை.

தத்துவார்த்த ரீதியில் ஐப்பசி மாதத்தை நாம் நோக்கின் சைவத்தின் உயர்ந்த தத்துவங்கள் இம்மாதத்தில் உணர்த்தப்படு கின்றன. மும்மலங்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்ட நரகாசுரனும், சூரனும் எவ்வாறு இம்மாதத்தில் மாய்ந்தார்கள் என்பதைப் பார்த்தோம். மும்மலங்களினின்றும் விடுபட்டு நல்லறஞ்செய்து நல்வழியிலே சென்றால் ஈடில்லாப் பெருவாழ்வு வாழலாம். சிவ, அம்பாள், முருக, விஷ்ணு மூர்த்திகளின் வழிபாட்டு மாதமாக ஐப்பசி மாதம் திகழ்கின்றமை குறிப்பிடற்பாலது. ஆகவே விரத அனுஷ்டானங்களுடன் மூர்த்திகளை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்வோமாக.

# சோதிவடிவான சிவதரிசனத்தைக் காட்டும் கார்த்திகை.

கார்த்திகை மாதத்தில் சோமவார விரதம் உள்ளது. திருக்கார்த்திகை விரதம் இருக்கின்றது. விநாயகசஷ்டி சிறப்புற ஆரம்பிக்கப் படுகின்றது. ஆகவே கார்த்திகை மாதம் சிவ, பிள்ளையார், முருகனுக்கான விரதங்களை விசேஷமாகக் கொண்டுள்ளது. ஆகையினால் கார்த்திகை மாத விசேஷங்களில் முதலாவதாக நாம் கார்த்திகைச் சோமவார மஹிமையை ஆராய்வோம்.

## சோமவாரம்

ஜடாமுடியின் கண் மூன்றாம் பிறைச் சந்திரன், முழு உலகையும் நல்வளமாக்கும் கங்காநதி, கழுத்திலே சர்ப்பமாலை, அரையிலே புலித்தோல், உடல் முழுவதும் திருநீறு, கைகளில் மான், மழு, உடுக்கு, அபய, வரதம் ஆகியன கொண்டு இடப்பாகத்தில் உமை அம்மையுடன் இடபாரூடராக சோமசுந்தரப்பெருமான் அருட் காட்சி நல்குவது சோமவார தினத்திலேயாம். ஆம்! சிவ விரதங்களுள் சோமவார விரதமும் மிக மேலானதொன்றே. சோமன் என்றால் பார்வதியுடன் கொலுவீற்றிருக்கும் சிவபெருமான் என்று பொருள். கார்த்திகைச் சுக்ல பக்ஷ அஷ்டமித் திதியில் சந்திரன் தோன்றினான். தனது நோய் தீர சிவனை நோக்கி விரதம் இருந்து நவக்கிரக நாயகருள் இரண்டாவது இடத்தைப் பெற்றான். சந்திரனுக்குச் சோமன் என்றும் பெயர். இதனால் திங்கட்கிழமை சோமவாரம் என அழைக்கப்படுகின்றது. கிருத யுகம் தோன்றியதும் சந்திரன் சிவபெருமானின் ஜடா முடியில் அமரும் பேற்றைப் பெற்றதும் கார்த்திகை மாத சோமவாரத்திலே தான். சோம வார விரதத்தை நோற்போர் திருமணம், நன்மக்கட்பேறு, உத்தியோகம், பொருள் வரவு, சௌபாக்கிய வாழ்வு முதலான பேறுகளைப் பெறுவர். இவைகளால் சோம வாரவிரதம் சிவனடியார் மத்தியில் பயபக்தியுடன் நோற்கும் விரதமாயிற்று.

சோம வார விரதத்தை அதிகாலை ஸ்னானஞ் செய்து பகலில் ஊன், உறக்கம் இல்லாதிருந்து மாலையில் சிவாலய தரிசனஞ் செய்யும் போது இத்தனை வருடங்களுக்குச் சோம வார விரதத்தை தான் பிடிப்பேன் எனச் சங்கற்பித்து ஆரம்பிக்கவேண்டும். கார்த்திகை முதற் சோம வாரத்தில் இருந்து சோம வார விரதத்தை

ஆரம்பித்தல் வேண்டும். இந்நாள் வசதிக் குறைவாகவிருப்பின் கார்த்திகை சோம வாரங்களில் ஒரு சோம வார தினத்திலிருந்து ஆரம்பிக்கலாம். இவ்விரதத்தை 1, 2, 3, 12, 14 அல்லது சீவிய காலம் வரை என சங்கற்பித்து ஆரம்பிப்பது வழக்கம்.

சோம வார விரதம் சிவனடியார்களால் கீழ்க்காணும் முறைகளிலே நோற்கப்படுகின்றது. காலை, உச்சிவேளை, சந்தியாவந்தனம், சிவபூஜை என்பனவற்றை நிறைவேற்றி சிவாலய தரிசனஞ் செய்து உச்சி வேளைப் பொழுதில் மட்டும் உணவு உண்பது ஒரு வகை விரதம்.

காலை, உச்சிவேளை மாலை சந்தியாவந்தனம் சிவபூஜை என்பன நிறைவேற்றி மாலையில் சிவ தரிசனஞ் செய்தபின் மாலைப் பொழுதில் ஒரு உணவு என்று அனுசரிப்பது இரண்டாவது வகை விரதம்.

மூன்று கால சந்தியாவந்தனம், சிவபூஜை, மாலையில் சிவாலய தரிசனம் செய்தபின் என்று உபவாசம் இருந்து மறுநாட் காலை, மத்தியான சந்தியாவந்தனம், சிவபூஜை என்பன நிறைவேற்றிய பின் பாறணை பண்ணுவது இன்னொரு வகையாகும். மூன்று கால சந்தியாவந்தனம், சிவபூஜை மாலையில் சிவாலய தரிசனம் ஊனும், உறக்கமும் இரவில் இல்லாதிருந்து சிவ சிந்தனையோடு சிவ தரிசனஞ் செய்து மறு நாள் காலை, உச்சிவேளை. சந்தியாவந்தனம், சிவபூஜை என்பன நிறைவேற்றி பாறணை புரிதல் நான்காவது முறையாகும்.

ஐந்தாம் முறையானது மூவேளை சந்தியாவந்தனம், சிவபூசை, மாலையில் சிவாலய தரிசனம், இரவு ஊன் உறக்கமில்லாதிருந்து நான்கு ஜாமந்தோறும் சிவபூஜை செய்து மறுநாள் இரண்டு வேளை சந்தியாவந்தனம், சிவபூஜை, சிவாலய தரிசனம் எல்லாம் இனிதே நிறைவேற்றிய பின் பாறணை பண்ணுவதாகும்.

கார்த்திகைச் சோமவார விரதத்தில் சிவாச்சார்யருக்கு உணவுக்கான பொருட்களைக் கொடுத்து உபசரித்து அவரது ஆசியைப் பெறவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு சிவனடியாருக்கும் திருவமுது கொடுத்து சுற்றத்தாருடன் பாறணை புரிதல் மிக்க நன்று எனவும் விளக்கப்பட்டுள்ளது. சங்கற்பித்த காலம் நிறைவுறும் போது சிவாலயத்தில் அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை, பிரசாத பூஜை என்பன செய்து தத்தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றலாம்.

கார்த்திகைச் சோமவாரத்தன்று மாலைப்பூஜையின்போது மஞ்சள் மா முதல் சங்காபிஷேகம் வரையிலான விமரிசையான அபிஷேகம் நிகழ்ந்து பழவகை, பால் சர்க்கரை கலந்த திருவமுது, பலகாரவகை என்பன நைவேதித்து பூஜைகள் நடாத்திய பின்பு

இடபாரூடரான சோமசுந்தரப் பெருமானுக்கும் பிராட்டியாருக்கும் வசந்த மண்டபத்திலே விரிவான தீபாராதனை நடைபெற்று வீதியுலா வருங் காட்சியும் வெகு சிறப்பாக இடம் பெறுவது வழக்கம். இஃது எல்லாச் சிவாலயங்களிலும் நிகழ்வதாகும். கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர தேவஸ்தானத்தில் கார்த்திகை கடைசிச் சோமவார தினத்தில் மேற் கூறியவை யாவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் அபிஷேகம், உற்சவம் என்பன நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடக்கூடியதொன்றாகும். திருவிளையாடற் புராணம் சோமவார மஹிமையையுரைக்கையில் உத்தமவிரதம் இஃது எனக் கூறுகின்றது.

உத்தம வொனோர் தம்மு
 ளுத்தம னாகு மீசன்
உத்தம சக்தி மாரு
 ளுத்தமி யுருத்தி ராணி
உத்தம விரதந் தம்மு
 ளுத்தமந் திங்க ணோன்பென்று
உத்தம மறைநூ லாதி
 யுரைக்குமிச் சோம வாரம்

என்பதுவே அப்பாடல் ஆகும்.

கார்த்திகை மாதத்துச் சோமவார மஹிமையையும் அதனை எப்படி நோற்க வேண்டும் என்பதனைக் கண்ணுற்ற நாம் இனி உமா மகேஸ்வர விரதத்தை நோக்குவோம்.

## உமா மகேஸ்வர விரதம்

உமா மகேஸ்வர விரதமானது கார்த்திகை மாதத்து பூரணை தினத்தில் சிவன் அம்பாளுக்காக நோற்கப்படும் விரதம் ஆகும். சிவாச்சார்யரை வீட்டிற்கு அழைத்து சிவன் அம்பாள் கும்பங்களை வைத்து பூஜைகள் செய்தபின் மதியபோசனஞ் செய்வது உத்தமம். இவ்விரதத்தைக் கணவன் மனைவி இருவருஞ் சேர்ந்து நோற்கலாம். காலையிலோ மாலையிலோ சிவாலய தரிசனஞ் செய்தல் நன்று.

## கார்த்திகை விரதம்

கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திர தினம் முருகப் பெருமானுக்கு உரிய விரதம் ஆகும். ஆகவே கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தன்று ஸ்னானஞ் செய்து சந்தியாவந்தனம் செய்து முருகனைத்தியானித்திருந்து மாலையில் முருகன், ஆலயங்களில்

நடைபெறும் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பவற்றைத் தர்சித்து உபவாசம் இருந்து மறுநாள் பாறணை புரிதல் உத்தமமானது. ஆனால் கார்த்திகை உற்சவ தரிசனத்துடன் அந்திப்பொழுதில் போசனஞ் செய்தும் விரதத்தை நிறைவேற்றலாம். பன்னிரண்டு வருடங்களுக்கு இவ்விரதம் நோற்கப்பட வேண்டும். இவ்விரதத்தின் கால எல்லை முடிவுறும் போது முருகப்பெருமானுக்கு அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை என்பன செய்து விரதத்தை நிறைவேற்றலாம், கார்த்திகையிற் கார்த்திகையானது திருக்கார்த்திகை என்ற சிறப்புப் பெயரோடு அழைக்கப்பட்டு வருகின்றது. அன்று குமாராலய தீபம் என்று முருகனாலயங்களில் தீப விழா இடம்பெற்று வருவது வழக்கம்.

## திருக்கார்த்திகை

திருக்கார்த்திகை தினத்தன்று சிவபெருமான் ஜோதிப் பிளம்பாகக் காட்சி கொடுத்தார். பிரமாவும், விஷ்ணுவும் தம்முள் யார் பெரியர் என வாதிட்ட போது சிவபெருமான் பெரும் ஜோதியாகக் காட்சி நல்கி அதன் அடி, அல்லது முடியினை யார் காண்பரோ அவரே பெரியர் எனக் கூறினார். இருவரும் முயற்சித்தனர். முடியவில்லை. ஈற்றில் சிவனே பெரியர் என ஏற்றுக் கொண்டனர். பிரம்மாவும் விஷ்ணுவும் கண்ட இவ்வரிய காட்சியை ஏனையோருக்கும் காட்டி அருள வேண்டவே ''கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்திற் காட்டுவோம்'' என்று அருளினார். அதுவே திருக்கார்த்திகைத் தீபம் திருவண்ணாமலையில் பெருஞ்சோதியாக உள்ளது.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச் சிவாயவே

**என்றும்**

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே

என்றும் தேவாரம் விதந்துரைக்கின்றது.

திருநாவுக்கரசர் ஓரிடத்தில்

''தேடிக் கண்டு கொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்'' என வர்ணிக்கின்றார்.

திருக்கார்த்திகை தீப மஹிமையைத் திருப்பாக்கள் கூறுவதை நாம் கண்ணுற்றோம். தீப தரிசனம் சர்வ மங்கள வாழ்வைத் தரவல்லது. தீபம் ஏற்றுதல் பாப விமோசனத்துக்காகவே. சுடர் ஒளியானது பெருவாழ்வைத்தரவல்லது. அதனாலன்றோ ''சோதியே சுடரே'' என விளித்துக் கூறினர்.

திருக்கார்த்திகைத் தினத்தன்று சிவன், அம்பாள், பிள்ளையார், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளை எழுந்தருளச் செய்து மூலஸ்தானத்தில் இருந்து சிவாக்கினியைக் கொண்டு வந்து கோபுரம் ஸ்தூபி, ஆலய மாடங்களிலெல்லாம் சிவாச்சார்யர் தீபம் ஏற்றுவார்.

கோவில் முன்றலில் உயர்ந்த பனை வடிவில் சொக்கப்பனை கட்டப்படும். காய்ந்த ஓலை, காய்ந்த மட்டை, தடி என்பனவற்றால் இஃது அமைக்கப்பட்டதாகும். சிவாச்சார்யர் சிவாக்கினியைச் சொக்கப்பனையில் ஏற்ற அஃது ஓங்கி வளர்ந்து பெருஞ்சோதி வடிவாகக் காட்சி அளிக்கும். இக்காட்சியானது சிவபெருமான் சோதியாகக் காட்சி கொடுத்தமையை நினைவு கூருவதாக அமையும். இவ்வரிய காட்சியினைக் கண்டு அடியார் கூட்டம் அரோஹரா! அரோஹரா! எனக் கூறிமகிழும். திருவண்ணாமலைச் சோதியைப் போல இக்காட்சி அமைவதாகவும் நினைவு கூருவர்.

அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்ல ஆயின நம்மை அடையுமே'' எனத் தேவாரம் அண்ணாமலைச் சிறப்பைக் கூறுகின்றது.

சர்வாலய தீபத்தன்று வீடுகளிலும் தீபம் ஏற்றப்படும். தீப்பந்தம் மண் சிட்டி, அகல்விளக்கு, குத்துவிளக்கு என்பன வீடுகளில் ஏற்றப்படும் தீபங்களில் சிலவாகும். சர்வாலய தீபத்தை அடுத்து நிகழ்வது விஷ்ணு ஆலய தீபமாகும். விஷ்ணு ஆலயங்களில் நெய் அதிகமாகப் பாவிக்கப்படும் தீபம் ஏற்றுவதற்கு நெய், இலுப்பெண்ணை என்பன மிகச் சிறந்தனவாகும்.

## பிள்ளையார் விரதம்

வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் என்பது முதுமொழி, விநாயகப்பெருமானின் இருபத்தொரு தினங்களைக் கொண்ட விநாயக சஷ்டி விரதம் கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டித் திதி வரையும் உள்ள நாட்களாகும். பிள்ளையார் ஆலயங்களில் இவ்விரத ஆரம்ப நாள் முதல் அபிஷேகம், சங்காபிஷேகம், லக்ஷார்ச்சனை என்பன சிறப்பாக இடம்பெறும். பிள்ளையார் கதை படிக்கப்படும். அடியார்கள் ஆரம்பநாளில் சங்கற்பித்து ஒரு வேளை உணவருந்தி விரதத்தை நோற்று கடைசிநாளில் உபவாசம் இருந்து மறுநாள் பாறணை புரிவர். கந்தபுராணம், லிங்கபுராணம், உபதேச காண்டம் முதலியவற்றில் பிள்ளையார் பெருமைகள் அதிகமாகக் கூறப்பட்டுன. இவைகளை ஒன்று திரட்டி சுன்னாகம் வரதபண்டிதர் ''பிள்ளையார் கதை'' எனும் அரிய நூலினை யாத்துள்ளார். இதனை விநாயகப் பெருமான் அடியார்கள் இக்காலத்தில் படிப்பது வழக்கம் விநாயகர் சஷ்டித் தினங்களில்

''கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும், அவல் பழமும்,

பாலுந்தெளிதேனும் பாகும் பருப்பும்'' ஆகிய சிறப்புப் பிரசாதங்கள் பிள்ளையாருக்கு நைவேதிக்கப்படுவது இருந்து வரும் மரபு ஆகும்.

கார்த்திகை மாதத்து பிரதோஷ காலத்தில் பிள்ளையார், நந்தி, சிவன், அம்பாளையும், சதுர்த்திப்பிள்ளையாரையும், சஷ்டியில் முருகனையும் வழிபடல் நல்லது. அமாவாசையன்று பிதுர்தர்ப்பணஞ் செய்து சிவ தரிசனஞ் செய்தல் மிக்கநன்று. பௌர்ணமியில் தாய் இல்லாதோர் தாய்க்காகவும், தாயிலும் மேலான தாயாகிய அம்பாளையும் விரதமிருந்து வழிபாடு செய்தல் சாலச்சிறந்தது.

பாற்கடலில் ஆதிசேஷன் அரவணைப்பில் படுத்துறங்கும் விஷ்ணு பகவான் கார்த்திகை மாதத்தில் துயில் நீங்கி எழுந்தருளுகின்றார். ஆகவே கார்த்திகைப் பூர்வ பக்ஷ ஏகாதசி முதல் ஏகாதசி விரதத்தை நோற்பாருளர். கார்த்திகைக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி ரமா எனப்படும். இது புண்ணியத்தைத்தருவது ஆகும். கார்த்திகைச் சுக்ல பக்ஷ ஏகாதசி ப்ரபோதினீ யாம். எல்லாக்கனிகளையும் இந்நாளில் நைவேதித்து எல்லாப் புஷ்பங்களாலும் மஹா விஷ்ணுவை அர்ச்சித்து வழிபடலாம். சதுர் மாஸ்ய விரதமிருப்போர் கார்த்திகையில் பருப்பு உண்ணலாகாது.

கார்த்திகை மாதம் ஜோதி வடிவினதான மாதம் என்பதனைக் கண்டோம், கார்த்திகை மாத விசேஷங்களை அனுசரித்து வாழ்வது நல்லது.

# நற்பெருவாழ்வை நல்கும் மார்கழி

மார்கழி ஒரு தேவாம்சம் கொண்ட மாதம். மும்மூர்த்திகளில் இருவரான சிவனதும், விஷ்ணுவினதும், பிள்ளையாரினதும் விசேஷங் களைக் கொண்ட மாதமாக அமைந்துள்ளது. ஆடி முதல் மார்கழி வரையுள்ள காலம் தேவர்களுக்கு இராக்காலம் ஆம்கு. அவ்வழியில் மார்கழி விடியற்காலைப்பொழுதாக உள்ளது. இரவு போய்ப் பகல் வரையுள்ளவைகறைப் பொழுது ஒரு சந்தியாகாலம். ஆகையினாலேயே இந்துக்கள் விடியற்காலையில் துயில் நீங்கி எழுந்து ஸ்நானஞ் செய்து, சந்தியா காலத்திலே சந்தியா வந்தனம், சிவ பூசை முதலானவற்றைச் செய்து கோவில் தரிசனஞ் செய்கின்றனர். எனினும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலையாக அமைவதால் அஃது எல்லோருக்குமே விசேஷ காலமாக இருந்துவருகின்றது.

## மார்கழிப் பூசை

வைகறைப் பொழுதில் மார்கழிப் பூசை என மார்கழி மாதத்துக் கென்றே ஒரு விசேஷ பூசை எல்லாக் கோவில்களிலும் இடம் பெற்று வருகின்றது. வழமையான பூஜையைவிட இப் பூஜை விசேஷ நைவேத்தியத்துடன் செய்யப்படுகின்றது. ஒரு கால, அல்லது இரு காலப் பூஜைகள் மட்டும் உள்ள கோவில்களில் வைகறைப் பூஜையே காலைப் பூஜையாக அமைகின்றது. இந்துக்கள் மார்கழிப் பூஜையை வழுவாது தரிசனஞ் செய்து வருகின்றனர்.

## மார்கழிப் பிள்ளையார்

இந்துக்களின் இல்லங்களில் வாசல் கழுவி அல்லது மெழுகிக் கோலம் இடுவது வழக்கம். மார்கழிப் பிள்ளையார் மார்கழியில் அக்கோலத்தின் மீது வீற்றிருப்பதை நாம் காணலாம். பசுவின் சாணத்தால் ஒரு பிள்ளையாரைப் பிடித்து மூன்று இதழ்களைக் கொண்ட அறுக்கம்புல், பூ ஆகியன சாத்திய பிள்ளையாரைக் கோலத்தின் மீது வைத்து மலர் தூவி வழிபாடுகள் செய்து வருகின் றனர். இது மார்கழிப் பிள்ளையார் வழிபாடு ஆகும்.

## விநாயக சஷ்டி

கார்த்திகையில் ஆரம்பித்த பிள்ளையார் விரதம் மார்கழி வளர்பிறைச் சஷ்டித் திதியுடன் நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாட்களைச் கொண்ட பிள்ளையார் பெருங்கதைப் படிப்பும்,

விநாயக சஷ்டியுடன் முடிவடையும், விநாயகர் அடியார்கள் சஷ்டி, யன்று உபவாசம் இருந்து மறுநாள் பாறணை செய்து தமது விநாயக விரதத்தை நிறைவேற்றுவர்.

விநாயக சஷ்டியன்று விநாயகப் பெருமானுக்கு விசேஷ கலச அபிஷேகம், சங்காபிஷேகம் ஆகியன நடைபெறும்.

இந்த விரத நாட்களில் லக்ஷார்ச்சனை நடைபெற்றுச் சஷ்டியுடன் நிறைவு பெறும். விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானை விரதம் இருந்து முறைப்படி வழிபாடுகள் செய்துவந்தால் நற் பெருவாழ்வு வாழலாம், என்பது இந்துசமய நம்பிக்கையாகும்.

## மார்கழிப் பஜனை திருப்பள்ளி எழுச்சி

மார்கழியில் வீதிதோறும் பஜனைகள் நடைபெறுகின்றன. பஜனை கோஷ்டிகளின் ஊர்வலங்கள் கடைசியாக கோவிலை வந்து அடையும். மணிவாசகப் பெருமான் பாமாலை சூட்டி எம்பெருமானை எழுந்தருளுமாறு வேண்டுகின்றார். இப்பாடல்கள் திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் எனப்படும். கோவிலை வந்து அடைந்த பஜனைக் கோஷ்டியினர் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைக் கோவிலிலே பாடி எம்பெருமானை எழுந்தருளுமாறு வேண்டுகின்றனர். கோவில்களில் அதிகாலையிலேயே திருப்பள்ளியெழுச்சிப் பாடல் களைப் பாடி கோவில் திருக்கதவுகளைத் திறந்து பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன.

## திருவெம்பாவை

மணிவாசகப் பெருமானால் பாடப்பட்ட திருவெம்பாவைப் பாடல்கள் தோழியர் ஒருவரை ஒருவர் துயில் நீங்கி எழுமாறு அழைக்கும் பாடல்கள் ஆகும். மார்கழித் திருவாதிரை நட்சத் திரத்துக்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவைக் காலம் ஆகும். இக்காலத்தில் அதிகாலையிலே எல்லாக் கோவில்களிலும் அபிஷேகம் பூஜை என்பன நடைபெறுகின்றன. அதன் பின்னர் திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்பட்டு ஒவ்வொரு பாடல் முடிவிலும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்து கற்பூர ஆராத்தி காண்பிக்கப்படுகிறது.

திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுபவர் மணிவாசகப் பொருமானாகப் போற்றப்படுகிறார். இதனால் அவருக்கு கோவில் பட்டு தலையிலே தலைப்பாகையாகக் கட்டப்பட்டு மாலை அணிவிக்கப் படுகிறது. அதன்பின்பே அவர் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுகிறார்.

இப்பாடல்கள் மார்கழி மாதப் பஜனையிலும் பாடப்பட்டு வருகின்றன. மும்மலங்களினின்றும் விடுபட்டு ஆன்ம ஈடேற்றத்துக் கான முறைகளை நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்று உயர்ந்த தத்துவத்தை திருவெம்பாவைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. திருவெம்பாவைக் காலத்தில் பல கோவில்களில் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பட்டு வருகின்றது திருவெம்பாவையின் கடைசித் தினம் திருவாதிரை யாகும்.

## மார்கழித் திருவாதிரை

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கே உரித்தான நன்னாள் மார்கழித் திருவாதிரையாகும். ஓம் என்ற பிரணவத்தைக் காட்டும் திருவாசி யின் நடுவே தூக்கிய திருவடியுடன் நடன நாயகனான ஸ்ரீ நடராஜப் பெருமான் நடனம் ஆடுகின்றார். பஞ்ச கிருத்தியங்களும் இந்நடனத் துள்ளே அடங்குகின்றன.

சிற்சபேசன் வீற்றிருக்கும் சிதம்பரத்தில் ஆதிரையானின் ஆருத்ராதரிசனத் தினத்தன்று அதிகாலை முதல் விசேஷ திரவ்வியா பிஷேகம், கலசஅபிஷேகம் என்பன நடைபெற்று பூஜைகள் நிறை வேறிய பின் கோலாகலமாக ரதோற்சவம் நடைபெறுகிறது. இதனைப்போன்று காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரத்திலும் அபிஷேக உற்சவங்கள் நடைபெற்று வருவது ஈண்டு குறிப்பிடற்பாலது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம், ஸ்ரீ முன்னேஸ்வரம், கொ/கயிலாதநாத சுவாமி ஆலயம், மட்/மாமாங்கேஸ்வரம் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரம் முதலான சிவத்தலங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் ஆருத்ராதர்சனம் சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

## திருப்பாவை

மலர்களைத் தொடுத்து அதனை மாதவனுக்குச் சாத்தி வழிபடுதல் ஒரு வகை வழிபாடு ஆகும். சூடிக் கொடுத்த நாச்சியார் எனச் சிறப்புப் பெயரைப் பெற்ற ஸ்ரீ ஆண்டாள் பாமாலை சூடி மாதவனை வழிபடுகிறாள். இது திருப்பாவை என அழைக்கப்படுகின் றது. இப்பாடல்களும் பஜனையாகப் படிக்கப்பட்டு வருகின்றது.

## வைகுண்ட ஏகாதசி

மாதங்களில் நான் மார்கழி ஆகின்றேன் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியுள்ளார்; ஸ்ரீ ரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி மிகவும் சிறந்த முறையிலே கொண்டாடப்பட்டு வருகின்றது. இதே போன்று ஏனைய வைஷ்ணவ ஆலயங்களிலும் வைகுண்ட ஏகாதசி பெரு விழாவாகவுள்ளது; இது சுவர்க்க வாசல் எனப்படும்.

இலங்கையில் வல்லிபுரக் கோவில், பொன்னாலைப் பெருமாள் கோவில், யாழ் பெருமாள் கோவில், தெஹிவளை பெருமாள் கோவில் போன்ற ஆலயங்களிலும் ஏனைய வைஷ்ணவ, பெருமாள் ஆலயங்களிலும் ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன மிகவும் நல்லமுறையில் நடத்தப்படுகின்றன.

ஏகாதசி விரதம் இருப்போர் வைகுண்ட ஏகாதசியில் இவ் விரதத்தை ஆரம்பிக்கின்றார்கள். ஏகாதசியன்று உபவாசம் இருந்து மறுநாள் பாறணை புரிந்து வருகின்றனர்.

மார்கழிச் சதுர்த்தியில் விநாயகர் வழிபாடு செய்ய வேண்டும், சஷ்டி, கார்த்திகையில் முருகனை வழிபடல் நன்று. பிரதோஷம், சோமவார நாட்களில் சிவ அம்பாள் தரிசனம் சிறப்பானது. மார்கழிக் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி உற்பத்தி ஏகாதசி ஆகும். சுக்ல பக்ஷ ஏகாதசி மோக்ஷ ஏகாதசியாம், வைகுண்டப் பேற்றை அடைய எல்லோரும் ஸ்ரீ வைகுன்ட ஏகாதசியைப் பக்திசிரத்தையுடன் நோற்று வருகின்றனர்.

மனோரம்மியமான வைகறைப் பொழுதில் மார்கழி மாதத்திலே எமது வழிபாடுகளைச் செய்து வருகின்றோம். முழு முதற் கடவுளரான சிவன், விஷ்ணு வழிபாட்டுக்கு உகந்த மாதமாக மார்கழி அமைந்துள்ளது. புலனடக்கத்துடன் இறை வழிபாட்டுக்கு உகந்தமாதம் மார்கழிமாதமேயாம். ஆகவே, நாமனைவரும் மார்கழி மாதத்தில் இறை வழிபாடுகளைச் செய்து நல்வாழ்வு வாழ்வோமாக!

''விரதமாவது மனம், பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்புடன் விசேடமாக வழிபடுதலாம்''

**ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர்**

# விசேட விரதகாலத் திருமுறைகள்

## மகா சிவராத்திரி காலத்தில் ஓதுதற்குகந்த திருமுறைப் பாடல்கள்

### தேவாரம்

**திருஞானசம்பந்தர்** பண் – தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழுவார் மறுகில் விதியால் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே.

**திருநாவுக்கரசர்** திருக்குறுந்தொகை

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

**சுந்தரர்** பண் – நட்டராகம்

அயனோடு அன்று அரியும்
அடியும் முடி காண்பரிய
பயனே எம்பரனே
பரமாய பரஞ்சுடரே
கயமாருஞ் சடையாய்
கடவூர்த் திருவீரட்டத்துள்
அயனே என் அமுதே
எனக்கார் துணை நீயலதே

### பெரிய புராணம்

**சேக்கிழார்**

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்

திருச்சிற்றம்பலம்

## பிரதோஷ விரதத்தன்று ஓதுதற்குகந்த திருமுறைப் பாடல்கள்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

**திருஞானசம்பந்தர்** பண் - பியந்தைக் காந்தாரம்

நாகந் தான் கயிறாக நளிர்வரை யதற்கு மத்தாகப்
பாகந்தேவ ரொடசுரர் படுகட லளறெழக் கடைய
வேக நஞ்செழ வாங்கே வெருவொடுமி ரிந்தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர் தமாக்குவித்தான் மறைக்காடே

**திருநாவுக்கரசர்** பண் - பழம்பஞ்சுரம்

பருவரை ஒன்று சுற்றி அரவங் கைவிட் ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடு மால்நி றத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றி தற்கொர் பிதிகார மொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவி டத்தை எரியாம லுண்ட
அவனண்ட ரண்டர் அரசே.

**சுந்தரர்** பண் - இந்தளம்

கடிக்கும் அரவால் மலையால் அமரர்
கடலைக் கடைய எழுகான கூடம்
ஒடிக்கும் முலகங் களைஎன் றதனை
உமக்கே அமுதாக உண்டீர் உமிழிர்
இடிக்கும் மழைவீழ்த் திழுத்திட் டருவி
இருபா லும்ஒடி இரைக்குந் திரைக்கை
அடிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை
எழகார் திருப்புத்தூர் அழகனீரே

**சேக்கிழார்** **பெரிய புராணம்**

அடியாராம் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழும்
கவின்மருகற் பெருமானே காவாய் என்றும்

திருச்சிற்றம்பலம்

கன்னிப்பெண்கள் திருமணப்பேற்றைப்பெற இத் திருப்புகழைத் தினமும் ஸ்னானஞ்செய்தபின் 36 அல்லது 108 தடவைகள் பாராயணஞ் செய்க

நீலங் கொள் மேகத்தின் மயில்மீதே
நீ வந்த வாழ்வைக் கண் டதனாலே
மால் கொண்ட பேதைக்குள் மணநாளும்
மார் தங்கு தாரைத் தந் தருள்வாயே
வேல் கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங் கொள் சூரர்க்குங் குலகாலா
நால் வந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார் தட்டும் பெருமாளே.

ஜன்மத்து வியாழன், அட்டமத்து வியாழன் முதலான வியாழ தோஷங்களுக்கு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வழிபட்டு இத் திருப்பாடலைத் தினமும் 36 அல்லது 108 தடவைகள் பாராயணஞ் செய்க.

கல் லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்க முதற் கற்ற கேள்வி
வல் லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல் லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி இருந்து காட்டிச்
சொல் லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்லாம்

## நல்வாழ்வுக்கான திருமுறைகள்

இத்திருமுறைகளை தினமும் காலையில் ஸ்னானஞ் செய்தபின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (ஒரு மண்டலம்) பாராயணஞ் செய்தால் நற்பலன் கிடைக்கும்.

**முடக்குவாதம், பிடிப்பு, வலிப்பு, நரம்புப்பாதிப்பு என்பன குணமடைய**

பாடிய இடம்:– திருபாச்சிலாச்சிராமம்
பாடியவர் :– திருஞானசம்பந்தர்
பண் :– தக்கராகம் ராகம்: காம்போதி
பதிகம் :– ''துணிவளர் திங்கள் துளங்கி விளங்க''

**அறுவைச் சிகிச்சையின்றிச் சுகப் பிரசவத்திற்கும் இரட்டைக் குழந்தை பிரசவ சிக்கல் தீர்வதற்கும்**

பாடிய இடம்;– திருச்சிராப்பள்ளி
பாடியவர் :– திருஞானசம்பந்தர்
பண் :– குறிஞ்சி ராகம்:– ஹரிகாம்போதி
பதிகம் :– ''நன்றுடையானைத் தீயதிலானை''

**திக்குவாய், மழலைச்சொல் நீங்கி நன்றாகப்பேச**

பாடிய இடம்:– தில்லை
பாடியவர் :– மாணிக்கவாசகர்
ராகம் :– மோகனம்
பதிகம் :– திருவாசகம் – திருச்சாழல்
''பூசுவதும் வெண்ணீறு''

**பூரான், பாம்பு முதலிய விஷ ஜந்துக்களின் விஷம் நீங்க**

இடம் :– திங்களூர்
பாடியவர் :– திருநாவுக்கரசர்
பண் :– இந்தளம் ராகம்: நாதநாமகிரியை
பதிகம் :– ''ஒன்றுகொலாமவர் சிந்தையுயர்வரை''

**வயிற்றுவலி நீங்க**

இடம் :– திருவதிகை வீரட்டானம்
பாடியவர் :– திருநாவுக்கரசர்
பண் :– கொல்லி ராகம்: நவரோஸ்
பதிகம் :– ''கூற்றாயினவாறு''

**காச்சல், தலைவலி, வெப்பநோய் நீங்க**

இடம் :- திரு ஆலவாய்
பாடியவர் ;- திருஞானசம்பந்தர்
பண் :- காந்தாரம்
பதிகம் :- ''மந்திரமாவது நீறு''

**நவக்கிரக தோஷம் நீங்க**

இடம் :- திரு மறைக்காடு
பாடியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- பியந்தைக் காந்தாரம்
பதிகம் :- ''வேயுறு தோளிபங்கன்''

**திருமணம் நிறைவேற**

இடம் :- திருமருகல்
பாடியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- இந்தளம் ராகம்: நாதநாமகிரியை
பதிகம் ;- ''சடையாய் எனுமால்''

**நல்ல கண்பார்வை பெற - இடதுகண்**

இடம் :- காஞ்சிபுரம்
பாடியவர் :- சுந்தரர்
பண் :- தக்கேசி
பதிகம் ;- ''ஆலந்தான் உகந்து அமுது செய்தானை''

**நல்ல கண்பார்வை பெற - வலது கண்**

இடம் :- திருவாரூர்
அருளியவர் :- சுந்தரர்
பண் :- செந்துருத்தி ராகம்: மத்தியமாவதி
பதிகம் :- ''மீளா அடிமை உமக்கே ஆளாய்''

**உயிருக்கு உருதியளிக்க - மனநிம்மதிக்கு**

இடம் ;- ஆச்சான்புரம்
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- கௌசிகம் ராகம்:- பைரவி
பதிகம் :- ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி''

இடம் ;- கரையேறிய குப்பம்
அருளியவர் :- திருநாவுக்கரசர்
பண் :- காந்தார பஞ்சமம் ராகம்:- கேதாரகௌளை
பதிகம் :- ''சொற்றுணை வேதியன்''

**தம்பதிகளை வாழ்த்த:- முத்து, பவள, மணிவிழா வாழ்த்துக்கு**

இடம் :- திருக்கழுமலம்
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- கொல்லி
பதிகம் :- ''மண்ணில் நல்ல வண்ணம்''

**மகப்பேறு கிடைக்க:-**

இடம் :- திருவெண்காடு
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- சீகாமரம் ராகம்:- நாதாநாமகிரியை
பதிகம் :- ''கண் காட்டும் நுதலானும்''

**பகைவர்களை வெல்ல:- விரோதத் தன்மை நீங்க**

இடம் :- தில்லை
அருளியவர் :- மாணிக்கவாசகர்
ராகம் :- மோகனம்
பதிகம் :- திருவுந்தியார் - ஞான வெற்றி
''வளைந்தது வில்லு விளைந்தது பூசல்''

**எடுத்த காரியம் தடங்கல் இல்லாமல் இனிது நிறைவேற:-**

இடம் :- திருஆலவாய்
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- பழம் பஞ்சுரம் ராகம்:- சங்கராபரணம்
பதிகம் :- ''வேதவேள்வியை நிந்தனை செய்துழல்''

**ஏழரைச்சனி, அஷ்டமத்துச் சனி, சனிபுத்தி காலத்துச் சனி தோஷம் நீங்க**

இடம் :- திருநள்ளாறு (இங்கு சனீஸ்வரனுக்கெனத் தனி ஆலயம், நளதீர்த்தம் உள்ளது)
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- பழந்தக்கராகம் ராகம்:- சுத்தசாவேதி
பதிகம் :- ''போகமார்த்த பூண்மூலையாள்''

**வழக்கில் வெற்றி பெறவும் இதரவெற்றிகளும்**

இடம் :- திருவீழிமிழலை
அருளியவர் :- திருஞானசம்பந்தர்
பண் :- குறிஞ்சி ராகம்:- ஹரிகாம்போதி
பதிகம் :- ''வாசி தீரவே காசு நல்குவீர்''

சுபம்

அச்சுப்பதிப்பு: ராஜன் பிரின்டர்ஸ் கொழும்பு - 2.

20 DEC 2021

705035